


# அபரக்கிரியைகள்

(அறிந்தவையும் அறியாதவையும்)

தொகுப்பு
**வயஹீரரான்.**

2025

உ
சிவமயம்

# அபரக் கிரியைகள்

(அறிந்தவையும் அறியாதவையும்)

தொகுப்பு:-
**வயலூரான்.**

# நூல் விபரம்

பெயர்:- **அபரக்கிரியைகள்**

*(அறிந்தவையும் அறியாதவையும்)*

| | | |
|---|---|---|
| தொகுப்பாசிரியர் | :- | வயலூரான் **செ. சுதாகரன்** |
| நூலின் அளவு | :- | A-5 |
| பக்கங்கள் | :- | 88 |
| பிரதிகள் | :- | 300 |
| அச்சமைப்பு | :- | திருக்கணித பதிப்பகம்,<br>சாவகச்சேரி. |
| பதிப்பு | :- | 2025.08.31 |
| விலை | :- | 475.00 |
| ISBN No | :- | 978-955-38036-6-5 |
| பதிப்புரிமை | :- | தொகுப்பாசிரியர் |

# சமர்ப்பணம்




என்னை ஆளாக்கிய எந்தையின் திருவடிகளுக்கு
இந்நூல் சமர்ப்பணம்.

# தொகுப்புரை

உலகிலே மிகத்தொன்மை வாய்ந்த இந்து சமயத்தின் பண்பாட்டோடு பின்னிப் பிணைந்து இரண்டறக் கலந்துள்ள அபரக்கிரியைகள் பற்றிய பூரண அறிவும் தெளிவும் எம்மில் பலரிடம் இல்லை. ஊருக்கு ஊர், நாட்டுக்கு நாடு இச்சடங்குகள் வேறுபடுகின்றன. புலம்பெயர் தேசங்களில் மாறுபட்ட பண்பாட்டுச் சூழலில் வாழ்கின்ற எம்மவர்களுக்கு இச்சடங்குகள் பற்றித் தெரியாமலுள்ளது. இச்சடங்குகள் பற்றி விளக்கமளிக்கும் நூல்கள் இலகுதமிழ் மொழியில் இல்லாததும் கிரியைகளை நடாத்துகின்ற குருமார்கள்கூட இதற்கான விளக்கங்கள் விதிமுறைகளைக் கூறாமலே கிரியைகளை நடாத்திச் செல் கின்றமையும் ஒவ்வொரு குருமார் ஒவ்வொரு விதிமுறைகளைப் பின்பற்றுவதோடு இடத்துக்கு இடம் வேறுபட்ட முறையில் நடாத்துவதும் இச்சடங்குகளின் புனிதத் தன்மை கெடுவதற்கும் உண்மை மறைவதற்கும் மக்களிடையே குழப்பநிலை ஏற்படவும் காரணமாக அமைகின்றது எனலாம்.

இவற்றைக் கருத்திற்கொண்டு தமிழர் பண்பாடுகள் மூடநம்பிக்கை கொண்டவையல்ல. அர்த்தம் நிறைந்தவை என்பதை எடுத்துக் காட்டுவதற்காக இந்நூலை வெளியிட எண்ணினேன். பல நூல்களில் இருந்து பெறப்பட்ட தகவல் களோடும் இணையவழியில் பெறப்பட்ட தகவல்களோடும் பல அறிஞர்களிடம் கேட்டறிந்த விடயங்களோடும் இந்நூலைத் தொகுத்து வெளியிடுகின்றேன்.

இத்தொகுப்பு நூலிற்கு ஆக்கபூர்வமான கருத்துகளை வழங்கியுதவிய குருமார்களான சிவஸ்ரீ ப. சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்ஐயா), திருக்கணித பஞ்சாங்க கணிதர் பிரம்மஸ்ரீ சி. ஜெகதீஸ்வர சர்மா மற்றும் சைவக் குருமார்களான சிவஸ்ரீ சோ. முருகதாஸ் குருக்கள், சிவஸ்ரீ க. கிருபானந்தக் குருக்கள் ஆகியோருக்கும் வேண்டிய ஆலோசனைகள் வழங்கிய அறிஞர் பெருமக்களுக்கும் நிதியுதவி நல்கிய அன்புள்ளங்களுக்கும் அச்சசுப்பதிப்புச் செய்தளித்த சாவகச்சேரி திருக்கணித

பதிப்பகத்தினருக்கும் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூல் சம்பந்தமான ஆக்கபூர்வமான கருத்துகளையும் விமர்சனங்களையும் வரவேற்கிறேன்.

நன்றி

மட்டுவில் வடக்கு, **செல்வராசா சுதாகரன்**
சாவகச்சேரி. 2025. (வயலூரான் - 0770710729)

## ஸ்ரீ இலஞ்சியாரணியம் மண்டுவில் அம்மன் ஆலய

*பிரதமகுரு அவர்களின்*

# ஆசியுரை

## அபரக்கிரியை விளக்கம்

நாம் முற்பிறவிகளில் புரிந்த நல்வினைப் பயன்கள் காரணமாக எமக்குக் கிடைத்தற்கரிய மானிடப்பிறவி கிடைத்துள்ளது. "**அரிது அரிது மானிடராதல் அரிது**" என ஔவைப் பிராட்டியும் கூறிச் சென்றுள்ளார். முன்னறிவித்தலின்றி எமக்குக் கிடைத்த மனிதயாக்கை முன்னறிவித்தலின்றியே மீளவும் பெறப்படும். எனவே நமது வாழ்நாளில் நல்வினைகளைப் புரிந்து இறை வழிபாட்டில் ஈடுபட்டுத் தீவினைகளை அகற்றிப் புராண இதிகாசங்கள், திருமுறைகள், ஆத்மீகக் கருவூலங்கள் காட்டும் வழியில் வாழ்வாங்கு வாழ்ந்து வீடுபேறடைவது நமது கடமையும் கடப்பாடுமாகும். இவற்றையே இறப்பிற்கு முந்தைய கிரியைகள் பூர்வக் கிரியைகள் எனவும் இறப்பிற்குப் பிந்திய கிரியைகள் அபரக்கிரியைகள் என்றும் அழைக்கப்படுவனவாகும்.

இன்றைய காலத்தில் மக்கள் அறிவு முதிர்ச்சி, நவீன தொழில் நுட்பம், அறிவியற் கண்டுபிடிப்புகள் காரணமாக எழுந்தமானமாக ஒழுக்க நெறிகளைக் கைவிட்டு வாழத் தலைப்பட்டுள்ளனர். அபரக்கிரியைகள் பற்றிய சரியான விளக்கமின்றி அனைத்துக் கிரியைகளும் எழுந்தமானமாக நிகழ்கின்றன. இவைகள் பற்றித் திருமூலநாயனார், அகோரசிவாச்சாரியர் போன்றவர்கள் தெளிவாகக் கூறிச் சென்றுள்ளனர்.

> **"ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்**
> **பெயரினை நீக்கிப் பிணமென்று பெயரிட்டுச்**
> **சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு**
> **நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே."**
>
> \- திருமந்திரம் -

நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிவதுடன் நின்றுவிடாது ஆற்றவேண்டிய கடமைகள் கிரியைகள் பல உள்ளன. எனவே இக்கிரியை விளக்கங்கள் பற்றி மக்களுக்குத் தெளிவூட்டுவதன் பொருட்டு கல்வயல் அமரர் செல்வராசா அவர்களின் புத்திரரான வயலூரான் **திரு.செல்வராசா சுதாகரன்** அவர்கள் **"அபரக்கிரியைகள் " (அறிந்தவையும் அறியாதவையும்)** என்னும் நூலினைத் தொகுத்துத் தமது தந்தையாரின் நினைவாக அன்னாரது ஆண்டுத்திதி நன்னாளில் வெளியிடுகின்றார். இன்றைய காலகட்டத்தில் இக்கைங்கரியம் மிகவும் வேண்டப்படுவதும் இன்றியமை யாததுமாகும். மேலும் இது அனைவருக்கும் அவசியமானதொரு கைநூலாகக் காணப்படுகின்றது. இவ்வகையில் இந்நூலின் தொகுப்பாசிரியரைப் பாராட்டி, வாழ்த்தி, ஆசிகூறி அமைகின்றேன்.

சுபம்

**சிவஸ்ரீ க. கிருபானந்தக் குருக்கள்**
தலைவர், அகில இலங்கைச் சைவக்குருமார் அர்ச்சகர்சபை,
யாழ்மாவட்டச் சர்வமதப் பேரவை,
யாழ்ப்பாணம்.

## மட்டுவில் திருக்கணித பஞ்சாங்க கணிதர்

அவர்களின்

# ஆசியுரை

மனிதவாழ்வில் பிறப்பும், இறப்பும் தவிர்க்க முடியாத இரு விடயங்களாகும். பிறந்து மரணிக்கும் வரை இடம் பெறும் கருமங்கள் பூர்வ சம்ஸ்கருமங்கள் என்றும் இறப்புக்குப் பின்வரும் கிரியைகள் அபர சம்ஸ்கருமங்கள் எனவும் சொல்லப்படும். பூர்வ சம்ஸ்கருமங்கள் பிறந்தவரின் நலன்கருதி செய்யப் படுவதாகும். ஆனால் அபரக்கிரியைகள் இறந்தவரின் ஆத்மா நற்கதியடைவதற்காகவும் எதிர்காலச் சந்ததி விருத்தியடை வதற்காகவும் செய்யப்படுவனவாகும்.

பிதிர் கடன்கள் உரிய ஒழுங்கில் உரிய காலத்தில் செய்யப்படவேண்டும் என்பது நியதியாகும். ஒருவர் இறந்ததும் தகனக்கிரியைகள் பலரது உதவியோடு இலகுவாக நிறை வேறிவிடும். பின்னர் அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியைகள் என்பவற்றை நிறைவேற்றுவதில் பலரது ஒத்துழைப்பும் தேவைப்படும்.

அபரக்கிரியைகள் செய்வதற்கு அபரான்ன காலம் என்று ஒரு காலம் உண்டு. இது பகலின் அளவை ஐந்து பாகங்களாகப் பிரித்து நான்காவது பாகத்தில் வரும் காலமாகும். பகல் 1-12 மணி மதல் 3-36 மணிவரையுள்ள காலத்தில் பிதிர் கருமங்கள் செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. சைவசமய முறைப்படி ஒருவர் இறந்து, 24 மணித்தியாலத்துக்குள் தகனம் செய்யப்படவேண்டுமென்பது நியதி. காலச்சூழ்நிலைகளாலும் பிள்ளைகள் பிறநாட்டில் இருப்பதாலும் அவர்களை எதிர்பார்த்து 3, 4 நாட்களுக்குப் பின்னரே தகனம் செய்யப்படவேண்டி ஏற்படுகின்றது.

தற்போதைய காலகட்டத்தில் இக்கிரியைகள் செய்வதில் சிரத்தை குறைவாகவே உள்ளது. சிலர் தமது 10, 15 வருடம்

சீராக்கம் செய்து விட்டோம். இனித்தேவையில்லை என்போரும் உண்டு. பெற்றோரின் கடன்கள் எம்மால் இயலுமானவரை செய்யப்பட வேண்டுமென்றே பிரமாணங்கள் கூறுகின்றன. இவ்வாறான அபரக்கிரியைகள் செய்யும் முறையை நூலுருவாக்கி வெளியிடும் கல்வயல் **செ.சுதாகரன்** அவர்களின் முயற்சி பெரிதும் விரும்பத்தக்கது. இக்கிரியைகளை ஆர்வத்துடன் செய்பவர்களுக்கு இந்நூல் சிறந்த வழிகாட்டியாக அமையும் என ஆசி வழங்குகின்றேன்.

107, W. A. சில்வாமாவத்தை,
கொழும்பு - 06.

இங்ஙனம்
**சி.ஜெகதீஸ்வரசர்மா**

## இந்துசமயப் பண்பாட்டில்

# மரணச் சடங்குகள்

**முன்னுரை.**

உலகில் பிறப்பும் இறப்பும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போலாகும். பிறந்தவர் அனைவரும் ஒருநாள் இறந்தேயாக வேண்டும். இது உலக நியதியுமாகும். இதிலிருந்து ஒருவரும் தப்பிக்கவோ விலகிடவோ முடியாது. ஓர் ஆத்மா உருவாவதும் இல்லை, அழிவதும் இல்லை. உடல் மட்டுமே அழிகின்றது. இந்த உடலில் உள்ள உயிரானது இவ்வுடலை விட்டுப் பிரிந்து வேறோர் உடலை எடுக்கின்றது. இவ்வாறு உடல் மாறி இன்னொரு உடலில் புகுகின்ற ஆரம்பநிலையே இறப்பு எனப்படுகின்றது.

ஒவ்வொருவரதும் கர்மவினைப் பயனின்படி இறப்பும் பிறப்பும் ஏற்படுகின்றது. வயது முதிர்வு, நோய், கொலை, தற்கொலை, வீரமரணம், மரணதண்டனை, விபத்துமரணம், இயற்கை அனர்த்த மரணம் என மரணமடையும் விதங்கள் மாறுபடுகின்றன. இதனடிப்படையில் இவர்களுக்கான இறுதிக் கிரியை முறையிலும் மாறுபாடுகள் இருக்கின்றன.

இந்துசமய மரபில் இவ்வாறான மரணச் சடங்குகளில் நாட்டுக்கு நாடு, இடத்திற்கு இடம், காலத்திற்குக் காலம் சிற்சில மாறுபாடுகள் ஏற்படுகின்றன. அத்தோடு பணவசதியும் இச்சடங்குகள் வேறுபடுவதில் செல்வாக்குச் செலுத்துகின்றது. தத்தம் வசதிக்கேற்ப மரணச் சடங்குகளைச் சுருக்கியும் விரித்தும் செய்வது போலவே சிலர் தவிர்த்தும் விடுகிறார்கள்.

முற்காலத்தில் ஒருவருடைய வீட்டில் இறப்பு நடந்தால் உறவினர்கள், அயலவர்கள் ஒன்றுகூடி 31 நாள்கள் இறந்தவரின்

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து இரவு பகலாக விளக்கேற்றி வழிபடுவது வழக்கமாக இருந்தது. அத்துடன் எட்டுச்செலவன்று தவிர ஒருமாதம் வரையும் அந்த வீட்டில் உணவு சமைக்க மாட்டார்கள். உற்றாரும் உறவினரும் அயலவர்களும் நண்பர்களுமெனத் திரண்டு முறைவைத்து உணவு சமைத்து வந்து பரிமாறுவார்கள். வீட்டினரைத் தவிர துடக்கு உரிமையுள்ள ஏனையோரும் அங்கு உணவுண்பார்கள். இப்பழக்கமானது உறவின் நெருக்கத்தையும் அடுத்தவர் துயரினில் பங்கெடுக்கும் தமிழர்தம் பண்பாட்டையும் எடுத்துக் காட்டுகின்றது.

காலமாற்றத்தின் காரணமாகவும் உறவினர்கள் நண்பர்கள் தொலைதூரங்களில் இருப்பதாலும் அயலிலுள்ளவர்கள் நெருக்கமான உறவற்றவர்களாக இருப்பதாலும் தற்காலத்தில் இச்செயற்பாடு அருகிவருவதைக் காணமுடிகின்றது. இருப்பினும் கிராமப் புறங்களில் இன்றும் இச்செயற்பாடு தொடர்கின்றது. இறப்பு நடந்த நாளிலிருந்து ஒருமாதம் வரையும் அயலவர்கள் அவ்வீட்டில் இரவு படுத்துறங்குவதும் வழக்கமாக இருந்தது. அவ்வாறு படுத்துறங்கினால் அவர்களும் துடக்குக் காக்கவேண்டும் என்பதற்காக தற்காலத்தில் இதுவும் அருகிவருகின்றது.

அத்துடன் மரணம் சம்பவித்த வீட்டின் அயலவர்களும் உறவினர்களும் அவ்வீட்டில் ஒன்றுகூடி ஆகவேண்டிய அனைத்துக் கருமங்களையும் ஒற்றுமையாகச் செய்வார்கள். கிரியைகள் நிறைவுற்று உடல் தகனத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட பின்பு வீட்டிலுள்ளவர்கள் வீடுவாசல் கழுவித் துப்புரவு செய்து தகனத்திற்கு சென்றவர்கள் வந்து தலை முழுகியதும் உறவுமுறையோர் சமைத்துவரும் உணவையே உண்பர். ஊரிலுள்ள பெரியவர் ஒருவர் இச்செயற்பாட்டைத் தலைமைதாங்கி நடாத்துவார்.

ஆனால் தற்காலத்தில் இக்கடமைகளைச் செய்வதற்கென்றே ஆங்காங்கு பல நிறுவனங்கள் உள்ளன. அவர்களுக்குத் தகவல் சொல்லிவிட்டால் இறந்தவருடைய

உடலைக் குளிப்பாட்டுதல், பந்தல் அமைத்தல், கிரியைக்கான ஒழுங்குகள், மேளம், மயான ஏற்பாடுகள் அடங்கலாக அனைத்தையும் அவர்களே செய்து முடித்து விடுவர். மொத்தமாக பணத்தைக் கொடுத்துவிட்டால் போதும். வேலைகள் சுலபமாக முடிந்துவிடும். இதனால் வீட்டுரிமையாளருக்கு வேலைச்சுமையும் பதகளிப்பும் இல்லாவிட்டாலும் உறவின் நெருக்கமும் ஒற்றுமையும் இல்லாமற் போய்விடுகின்றது.

இருப்பினும் கிரியைகளுக்கான பொருள்களை இயன்றவரை உரித்துடையோர் கொள்வனவு செய்வதே சிறந்ததாகும். அப்போதுதான் பொருள்கள் சுத்தமாக இருப்பதோடு பயன்படுத்திய பொருள்கள் மீண்டும் பயன்படுத்தப்படுவது தவிர்க்கப்படும். அத்துடன் உறவின் நெருக்கமும் அதிகரிக்கும்.

எமது இந்துசமய மரணச் சடங்கு முறைகளில் மரண மடையும் விதம் மற்றும் வயது அடிப்படையில் அவர்களுக்கான கிரியை முறைகளில் மாற்றங்கள் ஏற்படும். இறந்தவர் சமயதீட்சை பெறாத ஏழு வயதிற்குக் குறைந்தவராயின் புதைப்பதும் மேற்பட்டவராயின் உரிய கிரியைகள் செய்தபின்னர் தகனஞ் செய்வதும் வழக்கமாகும். அத்துடன் சமய தீட்சை பெற்ற ஒருவரே கிரியை செய்தல் வேண்டும். இல்லையேல் அன்றைய தினமே சமயதீட்சை வழங்கப்பட்டு கிரியைகள் தொடர்ந்து நடாத்தப்படும்.

## மரணச்சடங்குகள்

### 1. இயற்கை மரணம் - இறப்பதற்கு முன்

ஒருவரது உயிர் பிரியும் நிலை அடையும்போது அவருக்கு சுற்றத்தவரிடத்தும் பொருள் பண்டம் மீதும் உள்ள ஆசையினால் உண்டான பற்றை நீக்கும்பொருட்டு விபூதி பூசிச் சிவபெரு மானைத் தியானித்துக் கொண்டு பஞ்சபுராணம் ஓதிக்கொள்ளல் வேண்டும். அவருடைய மகனோ அல்லது சிவதீட்சை பெற்ற

ஒருவரோ விபூதி பூசிப் பால்பருக்கித் தலையைத் தம்மடிமீது வைத்து அவர்செவியில் பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசித்து செவியைக் கையினால் மூடவேண்டும். ஒருவருக்கு மரணம் அண்மித்ததை அறியும்போது ஆசார அனுட்டான முறைமைக் கமையப் புத்திரர்களால் அந்தணருக்குத் தானங்கள் வழங்கும் முறையும் நடைமுறையில் இருந்தது. அவரவர் வசதிக்கேற்ப கன்றோடு கூடிய பசு, நெல்விளையக் கூடிய அளவு நிலம், எள்ளு, பொன், நெய், உணவுத் தானியங்கள், வெள்ளி போன்றன தானங்களாக வழங்கப்பட்டன. எனினும் தற்காலத்தில் இம்முறையும் அருகிவருகின்றது.

**இறந்ததன் பின்னர்.**

உடலைவிட்டு உயிர் பிரிந்தபின்னர் உடலைக் குளிப்பாட்டிச் சுத்தம் செய்து ஒரு வாங்கினில் வெள்ளைத் துணி விரித்து தலை தெற்குப் பக்கமாக அமையும் வண்ணம் கிடத்தி காற்பெருவிரல்கள் இரண்டையும் இணைத்துக் கட்டுதல் வேண்டும். அத்துடன் கைப்பெருவிரல்கள் இரண்டையும் இணைத்துக் கட்டுதல் வேண்டும். மேலும் நாடியினையும் தலையுடன் சேர்த்துக் கட்டுதல் வேண்டும். விபூதி தரித்து உடல் முழுவதையும் வெள்ளைத் துணியினால் மூடுதல் வேண்டும். உடல் கிடத்தபட்டுள்ள வாங்கின் கீழே நீர் நிரம்பிய பாத்திரம் வைத்தல், நெல்லைப் பரப்புதல், உடலின்மீது உப்பினைப் பொட்டலமாகக் கட்டி வைத்தல் தலைமாட்டில் ஒருமுகமாக ஏற்றப்பட்ட குத்துவிளக்கினை வைத்தல் போன்ற காரியங்களையும் செய்தல் வேண்டும். இறந்த உடல் கிடத்தப்படும் இடத்திற்கு மேலே வெள்ளைத் துணியினால் விதானம் அமைத்தல் வேண்டும். இறந்த உடலினுள் எறும்புகள் கிருமிகள் நுழையாமல் இருப்பதற்காகவும் மேலிருந்து பல்லி போன்ற உயிரினங்களின் எச்சங்கள் விழாமல் இருப்பதற்காகவுமே இந்த ஏற்பாடு செய்யப்படுகின்றது. சுற்றாடலில் மஞ்சள் கலந்த தண்ணீர் தெளிக்கப்படுவதும் வேப்பிலையால் விசிறுவதும் இன்றும் நடைமுறையில் உண்டு. உறவினர்கள் அயலவர்கள் சேர்ந்து திருமுறைகளை ஓதுதல் வேண்டும்.

# இறுதிக்கிரியைகள்

## 1. பந்தல் அமைக்கும் முறை.

இறுதிக் கிரியைகள் செய்வதற்காக வீட்டு முற்றத்தில் பந்தல் அமைக்கப்படும். பந்தலானது முகடு அற்றதாக தட்டையானதாகவே அமைத்தல் மரபு. ஆயினும் தற்காலத்தில் தகரக் கொட்டகைகளே பெரும்பாலும் அமைக்கப்படுகின்றன. கிரியை செய்யப்படும் இடத்தில் மட்டும் தட்டையாக சிறு பந்தல் அமைப்பார்கள். பந்தலிற்கு வெள்ளைத் துணியினால் விதானம் கட்டுவார்கள். இது வெள்ளை கட்டுதல் எனப்படும். முற்காலத்தில் ஒரு குறிப்பிட்ட வர்ணத்தாரால் இக்கடமைகள் செய்யப்பட்டன. தற்காலத்தில் வீட்டில் உள்ளவர்களாலேயே இது செய் யப்படுகின்றது. அமைக்கப்பட்டுள்ள பந்தலைச் சுற்றி மாவிலை, தோரணம் கட்டி அலங்கரிக்கப்படும்.



மாவிலை தோரணங்கள் அமைத்தலில் ஒரு முறை இருக்கின்றது. (படத்திற்காண்க) மேற்புறமாக மூன்று இதழ்கள் வருமாறு தோரணம் அமைக் கப்படும். மாவிலையும் மறுபுற மாக மடித்துக் குற்றப்படும். கிரியை நடைபெறவுள்ள இடம் சாண [illegible] படும். மொந்தன் வாழை மரங்கள் (கறிவாழை மரங்கள்) இரண்டு குலையோடு கட்டப்படும். இவ்வாறு வாழைக்குலை கட்டப்படுவதிலும் ஊருக்கு ஊர் வேறுபாடு காணப்படுகின்றது. சில இடங்களில் பந்தலின் தெற்குப்புறமாக அதாவது பிரேதத்தின் தலைமாட்டில் கட்டப்படுகின்றது. சில இடங்களில் வீட்டுவள விற்கான வாயில் எந்தப்பக்கம் அமைந்துள்ளதோ அந்தப் பக்கத்தில் அதாவது வருவோர்களை வரவேற்கும் முகமாகக் கட்டப்படுகின்றது. இன்னும் சில இடங்களில் வீட்டுவாசலில் தெருவில் கட்டப்படுகின்றது. இன்னும் சில இடங்களில் பந்தலின் வடக்குப்புறமாகக் கட்டப்படுகின்றது. குருவானவர் வடக்கு நோக்கி

அமர்ந்தே கிரியைகள் செய்வதால் வடக்குப்புறம்தான் கிரியை மண்டபத்தின் வாயில் என்பதால் இவ்வாறு கட்டப்படுவதாகச் சொல்லப்படுகின்றது. இதே போலவே கட்டப்பட்ட வாழைக்குலைகளை கிரியைகள் முடிந்த பின்னர் அகற்றுவதிலும் வேறுபாடு காணப்படுகின்றது.

சில இடங்களில் குறிப்பாகத் தென்மராட்சிப் பகுதிகளில் எட்டுச்செலவு முடிந்த பின்னர் அகற்றப்படுகின்றது. சில பகுதிகளில் உடல் தகனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் போதே அகற்றப்படுகின்றது. இன்னும் சில இடங்களில் தகனஞ் செய்துவிட்டுத் திரும்பியதும் அகற்றப்படுகின்றது. இதற்கென ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு காரணம் சொல்கிறார்கள். இது சம்பந்தமாக நூலாதாரங்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

## 2. **கிரியை செய்வதற்கு உரித்துடையோர்.**

இறந்த ஒருவருக்கு இறுதிச் சடங்குகள் செய்பவர் கர்த்தா என அழைக்கப்படுவார். ஆண்பிள்ளை ஒருவரின் இன்றியமையாத கடமையாகவும் செயலாகவும் சிறப்பித்துச் சொல்லப்படுவது இறுதிக் கடன்களைச் செய்வதாகும். கடமை செய்யவும் கொள்ளி வைக்கவும் பெற்ற மகனே உரிமையுள்ளவன். அவ்வாறு பிள்ளை உள்ளவர்கள் ஒரு குறையும் இல்லாத பாக்கியவான்கள் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் நிலவுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரை கொள்ளிவைக்கும் உரிமை தந்தைக்கு மூத்தமகனும் தாய்க்கு இளையமகனும் என நடைமுறையில் உள்ளது. இருப்பினும் பிள்ளைகள் அனைவரும் இணைந்து தமது பெற்றோருக்கு கடமைசெய்தல் வேண்டும். இந்தியாவின் சில பகுதிகளில் தாய்க்குத் தலைமகன், தந்தைக்கு இளையமகன் என்ற முறையும் உண்டு. பின்வரும் ஒழுங்கில் ஒருவர் இல்லாத சந்தர்ப்பங்களில் மற்றவர் என்னும் ஒழுங்கில் கிரியைகள் செய்யப்படலாம்.

1. இறந்தவரின் மகன்
2. இறந்தவரின் மனைவி
3. இறந்தவரின் திருமணமாகாத மகள்
4. இறந்தவரின் மூத்த சகோதரன்
5. இறந்தவரின் இளைய சகோதரன்
6. இறந்தவரின் சகோதரனின் மகன்
7. இறந்தவரின் தந்தை
8. இறந்தவரின் தாய்
9. இறந்தவரின் மருமகன்
10. இறந்தவரின் சகோதரி
11. இறந்தவரின் சகோதரியின் மகன்
12. இறந்தவரின் தந்தைவழிச் சபிண்டன்
13. இறந்தவரின் தந்தைவழிச் சமானோதகன்
14. இறந்தவரின் தாய்வழிச் சபிண்டன்
15. இறந்தவரின் தாய்வழிச் சமானோதகன்
16. இறந்தவரின் சீடன்
17. இறந்தவரின் குரு
18. இறந்தவரின் மகளின் கணவன்
19. இறந்தவரின் நண்பன்
20 அரசன்

இவர்களைத் தவிர இறந்தவருடைய மகள்வழிப் பேரனுக்கும் உரித்துண்டு என்றும் சில இடங்களில் (இந்தியா) சொல்லப்படுகின்றது. மகள்வழிப் பேரனாயின் அவனது தாய் தந்தை உயிரோடு இருப்பினும் தனது பேரனுக்குக் கிரியை செய்யலாம் என்றும் சொல்லப்படுகின்றது.‘

சபிண்டன்- பிதிர்ப் பிண்டமிடுவதற்கு உரித்துடையோர் துடக்குரிமை உள்ளோர்

சமானோதகன் - பிதிர்களுக்கு நீர்விடுவதற்கு உரித்துடையோர்


ஆயினும் மகன், மனைவி, திருமணமாகாத மகள் தவிர்ந்த ஏனையோர் கிரியை செய்வதாயின் தம்முடைய தாய் அல்லது


தந்தைக்கு கிரியை செய்தவராக இருத்தல் வேண்டும். தாய் அல்லது தந்தைக்கு கிரியை செய்யாத ஒருவர் பிறருக்கு கிரியை செய்வதற்கு உரித்துடையவர் அல்லர். அத்துடன் பெண்கள் அபரக்கிரயைகளில் பங்குபற்றுவது இயன்றவரை தவிர்க்கப்படல் வேண்டும். பெண்கள் வீட்டுக்கு விலக்கானால் மரணக்கிரியையைத் தொடர்ந்து இடம்பெறவேண்டிய கிரியைகளை உரிய காலப் பகுதியில் செய்யமுடியாது என்பதால் பெண்கள் இக்கடமை களிலிருந்து விலக்கப்படுகின்றார்கள். எனினும் தற்காலத்தில் வேறு பொருத்தமான நபர்கள் இல்லாத பட்சத்தில் பெண்களும் செய்கிறார்கள். அவ்வாறு பெண்கள் செய்கின்றபோது அவர்களுக்கான பூணூல் கைகளில் கட்டப்படுகின்றது. ஒரு வெள்ளைத்துணி இடுப்பில் சால்வை போலக் கட்டப்படுகின்றது.

சமயதீட்சை பெற்று அதன்படி ஒழுகுபவருக்கே மந்திர பூர்வமான அபரக்கிரியை செய்தல் வேண்டும். அத்துடன் கிரியை செய்யும் கர்த்தாவும் சமயதீட்சை பெற்றிருத்தல் வேண்டும். சமயதீட்சை பெறாதவருக்கும் மது, மாமிசம் உண்பவர்களுக்கும் மந்திரமின்றி தேவார திருவாசக ஓதலுடன் மயானம் கொண்டு சென்று தகனம் செய்தல் வேண்டும். அல்லது பூதவுடலுக்கு தீட்சை வைத்தபின்னர் மந்திரபூர்வமான கிரியைகள் செய்யப்படலாம். தற்காலத்தில் இம்முறையும் மீறப்படுகிறது.

## கிரியை முறைகள்.

கிரியை செய்பவர் தலைமுடியைச் சவரஞ்செய்து நீராடிப் புத்தாடை அணிந்து சமய அனுட்டானம் செய்துகொள்ளல் வேண்டும். கிரியை செய்யும் குருவானவர் கிரியை செய்வதற்கென அமைக்கப்பட்டுள்ள பந்தலில் பின்வருமாறு கும்பங்களை அமைத்துத் தயாராக வைத்திருப்பார்.






கிரியை தொடங்குமுன் குருவானவர் கர்த்தாவிற்கு விபூதி கொடுத்து பூணூல், பவித்திரம் (தர்ப்பை) அணிவித்துச் சங்கற்பம் செய்விப்பார். செய்யப்படும் கிரியையில் மனதைப் பூரணமாகப் பதித்து அவ்விடத்திலேயே நிறுத்துவது சங்கற்பம் எனப்படும்.

இதற்காக வலது கையில் தருப்பை, பூ, அரிசி, எள்ளு, முதலியவற்றை வைத்துக்கொண்டு வலதுகை மேலாகவும் இடதுகையை கீழாகவும் வைத்துக் கொண்டு இடது பெருவிரலை வலது பெருவிரலால் அமர்த்தி வலது முழந்தாளில் வைத்தல் வேண்டும். சங்கற்ப மந்திரத்தில் இன்ன வருட, அயன, மாத, பட்ச, நட்சத்திர, வார தினத்தில் என்னுடைய தாய், அல்லது தந்தைக்கு பூதவுடலைச் சுத்தி செய்வதற்காகவும் சிவாக்கினியை மூட்டுவதற்காகவும் இக்கிரியை செய்கிறேன் என உறுதி எடுத்துக் கொள்ளப்படும்.

பின்னர் விநாயக பூசை, புண்ணியாகவாசனம் செய்து பஞ்ச கௌவியத்தை மண்டபத்தைச் சுற்றித் தெளித்து மண்டபத்தைச் சுத்தஞ்செய்து சுற்றிவர நெற்பொரியை இறைத்துக் கொள்ளுவார். கெட்ட தேவதைகள் மண்டபத்தினுள் புகுந்து கிரியைகளைக் குழப்பாமலிருப்பதற்காக இந்த ஏற்பாடு. கிரியை செய்பவருக்கு பஞ்சகௌவியம் பருகக் கொடுக்கக் கூடாது. இச்சந்தர்ப்பத்தில் உறவினர்கள் அயலவர்கள் சேர்ந்து திருமுறைகளை ஓதுவார்கள். தற்காலத்தில் இதற்கெனப்

பிரத்தியேகமாக ஓதுவார்களை சம்பளத்திற்கு நியமிக்கப் படுகின்றார்கள்.

குருவானவர் அங்கநியாசம், கரநியாசம், சிவோகம் பாவனை செய்து ஸ்நபனகும்ப பூசை முடித்து அக்கினி காரியம் பூர்ணாகுதி கொடுத்துக் கிரியைகளை நிறைவு செய்வார். கிரியை செய்பவரிடம் நெற்பொரி கொடுத்து அதனைப் பிரேதத்தின் மீது போட்டுக் கற்பூரதீபம் இடஞ்சுழியாகக் காட்டி வணங்கிய பின்னர் குளிப்பாட்டுதலுக்காக உடலை வீட்டின் தெற்குப்புறமாக பின்பகுதிக்கு எடுத்துச் சென்று தலை தெற்குப்பக்கமாக அமையும் வண்ணம் வைத்தல் வேண்டும். உடலை தூக்கி இருத்தக் கூடியதாக இருப்பின் ஒரு கதிரையில் இருத்துவார்கள்.

பதப்படுத்தி நீண்டநாள் வைக்கப்பட்ட உடலாயின் கிடத்தியபடியே வைத்து தலைமாட்டில் ஒரு நிலைக்கண்ணாடி பொருத்தப்பட்டு ஒரு தேங்காய் வைக்கப்பட்டு அதற்கே அபிடேகம் முதலியன செய்யப்படும். அபிடேகத் திரவியங்களை உடலின் மீது தெளித்து தேங்காய்க்கு அபிடேகஞ் செய்யப்படும். இது அக்கண்ணாடியில் உடலுக்கு அபிடேகஞ் செய்யப்படுவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும்.

குளிப்பாட்ட ஆரம்பிப்பதற்கு முன்னராக அரப்பெண்ணெய் வைக்கும் நிகழ்வு இடம்பெறும். இறந்தவரின் உரித்துடையோர் அதாவது துடக்கு உரிமையுள்ளவர்கள் மட்டும் இக்கடமையைச் செய்தல் வேண்டும். இறந்தவரின் மகன், மனைவி, திருமணமாகாத மகள் தவிர்ந்த ஏனையோர் ஆயின் தமது தாய் அல்லது தந்தைக்கு கிரியை செய்தவர்களாக இருத்தல் வேண்டும். திருமணமான சுமங்கலிப் பெண்கள் அது சொந்த மகளாக இருந்தாலும் இக்கடமை செய்வதற்கு உரித்துடையவர்கள் அல்லர். அவர்கள் வேறு குடும்பத்திற்கு வாழ்க்கைப் பட்டுச்சென்றதாலும் கணவன் உயிரோடிருப்பதாலும் விலக்கப்பட வேண்டியவர்கள் என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். ஆயினும் தற்காலத்தில் இவ்விதி மீறப்படுகின்றது. கணவனின் அனுமதி

பெற்றுச் செய்யலாம் என்றகருத்தும் நிலவுகின்றது. இதற்கு சில குருமார்களும் உடந்தையாக உள்ளமை வேதனைக்குரியது. கிரியை செய்பவர் தவிர்ந்த அனைவரும் அரப்பெண்ணை வைத்து நிறைவடைந்த பின்னர் கிரியை செய்பவர் இறுதியாக வைக்க வேண்டும். அதன் பின்னர் பிறிதொருவர் வைக்க முடியாது.

அத்துடன் இக்கடமை செய்தால் முப்பத்தொரு நாள்கள் துடக்குக் காத்தல் வேண்டும். அவ்வாறு செய்ய முடியாதவர்கள் இதனைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். இக்கடன் செய்தவர்கள் 31 நாள்கள் ஆலயஞ் செல்வதோ சுபகாரியங்கள் செய்வதோ கூடாது.

கிரியை செய்யும் கர்த்தாவானவர் உடலின் கிழக்குப் புறமாக நின்று இன்னொருவரின் உதவியுடன் உடலுக்கு அபிடேகஞ் செய்தல் அதாவது குளிப்பாட்டுதல் வேண்டும். இறந்தவரின் கால் மாட்டில் இருந்து தலைவரை தனது புறங்கையினால் இடதுகையின்மேல் வலதுகையை வைத்து இந்தக் கடமையைச் செய்தல் வேண்டும்.

## அபிடேகஞ் செய்யும் திரவிய ஓழுங்கு.

1. அரிசி மா
2. மஞ்சள் மா
3. அபிஷேகக் கூட்டு
4. பஞ்சகௌவியம்
5. பஞ்சாமிர்தம்
6. பால்
7. தயிர்
8. இளநீர்
9. ஏனைய கும்பங்கள்
10. சிவகும்பம் ( பிரதான கும்பம்)

ஒவ்வொரு அபிடேகத்திற்கு இடையிலும் நீரினால் அபிடேகஞ் செய்தல் வேண்டும். குளிப்பாட்டும் இடத்தில் மேற்புறம்

வெள்ளைத் துணியால் விதானம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். தற்காலத்தில் அவ்வாறு இருப்பதாக பாவனை செய்யும் முறையில் மூன்று தடிகளை ஒரே குழியில் நட்டுவைத்து அதன்மேற்புறத்தை முக்கோணமாக்கி ஒரு வெள்ளைத்துணி கட்டப்படுகிறது. (இதனை முக்காடு என்பர்)

பிரதான கும்பத்தை அதாவது சிவகும்பத்தைக் கர்த்தாவே நேரடியாகச் சென்று எடுத்து வந்து அபிடேகித்தல் வேண்டும். பின்னர் ஆடைமாற்றி வாசனைத் திரவியங்களைத் தெளித்து கிரியை மண்டபத்திற்கு உடலைக் கொண்டுவந்து ஒரு வாங்கில் வெள்ளைத் துணிவிரித்து அதன்மேல் கிடத்துதல் வேண்டும். தற்காலத்தில் பெட்டியுடன் வைக்கும் முறையே காணப்படுகின்றது. தலையானது தெற்குப் புறமாக இருக்கும்வண்ணம் குருக்களுக்கு இடப்புறமாக அதாவது கிரியைப் பந்தலின் மேற்குப் புறமாக வைக்கப்படல் வேண்டும்.

அதன் பின்னர் கிரியை செய்பவர் திருநீற்றை நீரில் குழைத்து சத்தியோசாதம் முதலாக முழந்தாள்கள், தொப்புள், மார்பு, நெற்றி, சிரசு, புயம், இரண்டு முழங்கைகள், இரண்டு மணிக்கட்டுகள், இரண்டு விலா, முதுகு, கழுத்து ஆகிய இடங்களில் உரிய மந்திரத்துடன் பூசிப் பன்னீரால் கைகழுவி உடலின் சிரசில் தெளிக்கவும். இவ்வேளையில் திருநீற்றுப் பதிகம் ஓதுதல் வேண்டும். தொடர்ந்து சந்தனம், குங்குமம் இட்டு உரித்துடையவர்களாலும் ஏனைய விருப்புடையோராலும் பூமாலை அணிவிக்கப்படும். பூமாலை அணிவிப்பதாலோ பூப்போட்டு வணங்குதலாலோ ஒருவருக்குத் துடக்கு ஏற்படாது. யாரும் செய்யலாம்.

## சுண்ணம் இடித்தல்.

அதன் பின்னர் கிரியை நடைபெறும் மண்டபத்தின் வடகிழக்குப் பக்கமாக தலைவாழை இலையில் நெல்பரப்பி அதன்மேல் வைக்கப்பட்டிருக்கும் உரலில் சுண்ணம் இடிக்கும் சடங்கு இடம்பெறும். சுண்ணமிடிக்கும் உரலிலும் உலக்கையிலும்

மாவிலையும் தெற்பையும் (கூர்ச்சம்) வெள்ளைத் துணியால் கட்டப்பட்டிருக்கும். உரலினுள் அறுகு, மஞ்சள்மா என்பவற்றை இட்டு எண்பத்தொரு பதமந்திரம் சொல்லி மூன்றுதரம் இடிக் கப்பட்ட பின்னர் திருப்பொற்சுண்ணம் பாடப்படும். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் உலக்கையால் இடித்தல் வேண்டும். கிரியை செய்பவர்கள் இடக்கையால் உலக்கையைப் பற்றி வலக்கையை இடக்கையின் மீது பிடித்தவண்ணம் சுண்ணம் இடித்தல் வேண்டும்.

இறுதியாக உரலில் இருந்து சுண்ணப்பொடியை எடுத்து உரலுக்குப் பக்கத்தில் உள்ள கும்பநீர் விட்டுக் குழைத்து கிரியை செய்பவர் நெற்றியில் பொட்டிட்டு இறந்தவருக்கும் பொட்டிட்டு உடலின் இரண்டு கண்களிலும் சாத்தி மிகுதியை உடல் முழுவதும் பன்னீரால் கரைத்து தெளிக்க வேண்டும். இறந்தவரின் ஊனக்கண்களை மறைப்பதற்கே இச்சடங்கு இடம்பெறுகின்றது.

சுண்ணம் இடிக்கும் வேளையில் இறந்தவரது பேரப் பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் மற்றும் உரித்துடையோர் உடலைச் சூழநின்று பந்தம் பிடிப்பர். கிளுவந் தடியில் துணியினால் சுற்றி எண்ணெயில் தோய்த்து இப்பந்தம் தயாராக வைக்கப்பட்டிருக்கும்.

உடலைக் குளிப்பாட்டுவதற்கு முன்னரே சுண்ணம் இடித்து அச்சுண்ணம் சாத்தியே குளிப்பாட்டுதல் முறை யானதாகும். ஆயினும் நம்மவர்களின் ஆசாரக் குறைவு காரணமாகத் தற்காலத்தில் சிவகும்ப ஸ்நானம் செய்து உடல் சுத்திகரிக்கப்பட்டுச் சவம் என்ற நிலையிலிருந்து சிவமாக்கப் பட்டதன் பின்னர் சுண்ணப்பொடி தெளிக்கப்படுகின்றது.

இதன் பின்னர் இறந்தவர் நற்கதி அடையவேண்டியும் பிரேத யாத்திரையின் பொருட்டும் குருவானவருக்கு மூன்று தானங்கள் வழங்கப்படும். அவையாவன தசதானம், நக்ன

தானம், யாத்ரா தானம் என அழைக்கப்படும். இங்கு வழங்கப்படும் நக்னதானம் தகனக்கிரியை முடிந்தபின்னர் வீடு திரும்பும் வழியில் ஒரு நீர்நிலைக்கு அருகில் குருவானவருக்கு வழங்கப்படுவதே சாஸ்திர விதியாகும். இறந்தவரின் பசி, தாகம், முதலியவற்றை நீக்கும் பொருட்டே இத்தானம் வழங்கப்படுகின்றது. இருப்பினும் தற்காலத்தில் நேரகாலம் போதாமையாலும் வசதி கருதியும் இறுதிக் கிரியையின் போது வழங்கப்படுகின்றது.

## பூப்போட்டு வணங்குதலும் வாய்க்கரிசி இடலும்.

தானங்கள் வழங்கப்பட்டதன் பின்னர் பூப்போட்டு வணங்குதல் இடம்பெறும். உரித்துடையவர்களும் ஏனையவர்களும் குருவிடமிருந்து பூக்களினைப் பெற்று உடலை இடப்புறமாகச் சுற்றிவந்து கால்மாட்டில் பூக்களை இட்டு வணங்கவேண்டும். மனைவி இறந்தால் கணவன் உடலைச்சுற்றி வராமல் பூவை நெஞ்சிலே போட்டு அவருக்கு ஆசீர்வாதம் வழங்குதல் வேண்டும். சுமங்கலிப் பெண்ணாக இறக்கும்போது நிறைநாளி ஒன்றைப் பிரேதத்தின் கைகளால் தொடச்செய்து வீட்டின் உள்ளே வைத்தல் வேண்டும். வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், தேங்காய் முதலியவற்றைச் சேலை முந்தானையில் முடிந்துவிடல் வேண்டும். கணவன் இறந்தால் மனைவி தாலியைக் கழற்றிக் கணவனின் மார்பில் வைத்தல்வேண்டும். இங்கும் நிறைநாளியை பிரேதத்தின் கைகளால் தொடச்செய்து வீட்டினுள்ளே வைத்தல் வேண்டும்.

அடுத்ததாக வாய்க்கரிசி இடப்படும். பெண்கள் சுடுகாட்டிற்குச் செல்லும் வழக்கம் இல்லையாதலால் வீட்டிலேயே வாய்க்கரிசி இடுவர். அத்துடன் சுடுகாட்டிற்கு செல்லமுடியாத ஆண்களும் இங்கு வாய்க்கரிசி அடுவர்.பச்சையரிசியுடன் தேங்காய்ச் சொட்டுகள் , சில்லறைக் காசுகளும் கலந்து இவ்வாய்க்கரிசி தயார் செய்யப்பட்டிருக்கும். உடலை இடதுபுறமாகச் சுற்றிவந்து வாய்க்கரிசி இடப்படல் வேண்டும். இறந்தவரின் மனைவி, ஆண்பிள்ளைகள், திருமணமாகாத

பெண்பிள்ளைகள், உரித்துடையவர்களில் தாய் அல்லது தந்தைக்கு கடமை செய்தவர்கள் வாய்க்கரிசி இடலாம். சுமங்கலியாகவுள்ள பெண்பிள்ளைகள் அவர்களது தாய் அல்லது தந்தை இல்லாவிட்டாலும் கூட வாய்க்கரிசி இடுதல், அரப் பெண்ணெய் வைத்தல் போன்ற சடங்குளில் இருந்து விலகி யிருத்தல் வேண்டும். அவர்கள் இன்னொரு குடும்பத்தில் வாழ்க்கைப் பட்டிருப்பதாலும் கணவன் உயிரோடு இருப்பதாலும் இக்கருமங்களில் இருந்து விலகியிருத்தல் வேண்டும்

இறந்தவர் மிகநெருங்கிய உறவினராயின் தனது கணவனின் சம்மதத்தைப் பெற்று அவரது அனுமதியுடன் இக்கடமைகள் செய்யலாம். அதுமட்டுமன்றி வாய்க்கரிசி இட்டவர்களுக்கும் அரப்பெண்ணெய் வைத்தவர்களுக்கும் 31 நாள்கள் துடக்கு உண்டு. ஆகவே 31 நாள்கள் துடக்கு காக்கக் கூடியவர்கள் மட்டுமே இவற்றைச் செய்தல் வேண்டும். ஆயினும் இச்சடங்குகளை அறியாத இக்காலத்தவர்கள் இவ்விதியை மீறிச் செயற்பட்டுப் பாவத்தைத் தேடிக்கொள்கின்றனர். இவ்வாய்க்கரிசி இறந்தவருக்கு வழங்கப்படும் இறுதி உணவாக, உபசாரமாகக் கருதப்படுகின்றது.

## சுடுகாட்டிற்கு எடுத்துச்செல்லல்.

பின்னர் உடலை முழுவதுமாக வெள்ளைத் துணியினால் மூடி உடலின் கீழுள்ள துணியையும் சேர்த்து வெள்ளைத் துணியால் கட்டப்படும். பச்சைக் கமுகு அல்லது மூங்கில் மரத்தினால் கட்டப்பட்ட பாடையின் உள்புறத்தில் பச்சைத் தென்னோலையினால் செய்யப்பட்ட பன்னாங்கின் மேல் உடல் கிடத்தப்படும். பாடை என்பது உடல் கொண்டு செல்வதற்கென பிரத்தியேகமாக அமைக்கப்படும் ஒரு ஊர்தியாகும். இது தோளில் சுமந்து செல்லக்கூடிய விதத்தில் அமைக்கப்பட்டிருக்கும். ஆயினும் தற்காலத்தில் பிரேதப்பெட்டி, பிரேதவாகனம் என்பன வந்துள்ளமையினால் இப்பாடை கட்டும் சடங்கு இடம்பெறுவ தில்லை. அத்துடன் உடலும் மூடிக்கட்டப்படாமல் பெட்டியை மூடிக் கட்டுவார்கள்.

கிரியை மண்டபத்தில் இருந்து உடல் வீதியில் வைக்கப்பட்டுள்ள பாடைக்கு அல்லது பிரேதவண்டிக்கு எடுத்துச் செல்லப்படும். அவ்வாறு கொண்டு செல்லும்பொழுது தற்காலத்தில் பந்தற்காலில் பெட்டியினால் மூன்றுமுறை இடிப்பார்கள். இது ஒரு தவறான செயற்பாடாகும். இறந்தவர் தற்போது இறைவனாகச் சித்திரிக்கப்படுவதால் ஆலயத்தில் எவ்வாறு இறைவனை அமைதியாக அலுங்காமல் குலுங்காமல் கொண்டு செல் கின்றோமோ அதேபோல இறந்தவரையும் கொண்டு செல்லுதல் வேண்டும். முற்காலத்தில் உடலானது வழமையாகப் பயன்படுத்தும் வாசல் சிறிதாக இருந்ததன் காரணமாக அதற்கெனப் பிரத்தியேக வழியை ஏற்படுத்தி அதன்மூலமே வெளியில் கொண்டு செல்வர். தற்காலத்தில் வாசல்வழி பெரிதாக உள்ளமையினாலும் மதில் அமைந்துள்ளமையினாலும் இம்முறை பின்பற்றப்படுவதில்லை.

பாடையில் அல்லது பிரேத வண்டியில் உடல் வைக்கப்பட்ட பின்னர் உரித்துடைய பெண்கள் இடப்புறமாக மூன்று முறை அவ்வாகனத்தைச் சுற்றி மாரடித்து ஒப்பாரி வைத்து அழுவர். அதனைத் தொடர்ந்து உடல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அவ்வேளையில் இறுதிக்கடன் செய்பவர் கொள்ளிக்குடத்தை இடது தோளில் சுமந்துவர புகையுடன் கூடிய கொள்ளிச் சட்டியைத் தென்னை மட்டையில் அதற்கெனப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட உறிபோன்ற அமைப்பினுள் வைத்து எடுத்துவரக் குனிந்த தலையுடன் சுற்றத்தவர் சூழ்ந்துவரப் பறைமேளம் முழங்க மயானம் நோக்கி ஊர்வலமாகச் செல்வர். உடல் எடுத்துச் செல்லப்பட்டு தெருமுனை கடக்கும்வரை பெண்கள் மாரடித்து அழுவார்கள். இறப்புச் செய்தியை அறிவிப்பதற்காகவும் இறந்தவர் வீட்டிலும் செல்லும் வழியெங்கும் உள்ள நுண்கிருமிகளை அழிப்பதற்காகவுமே மிகையொலியுடைய பறை அல்லது பான்ட் வாத்தியம் இசைக்கப்படுகின்றது.

தற்காலத்தில் பறைக்குப் பதிலாக வசதிபடைத்தவர்களது இறுதிச் சடங்கில் பான்ட் வாத்தியமும் இசைக்கப்படுகின்றது. கொள்ளி வைப்பவர் நடந்து வருவதற்காக வீட்டிலிருந்து மயானம்

வரைக்கும் வெள்ளைத்துணி (நிலபாவாடை) விரிக்கப்படுவதும் வசதி படைத்தவர்களால் செய்யப்படும். வீதியில் கட்டப்பட்டுள்ள தோரணங்களும் வாழைமரங்களும் உடல் சென்றதும் அறுக்கப்படும். இவ்வாறு அறுக்கப்பட்டால் உடல் மயானத்திற்குச் சென்றுவிட்டதெனப் பொருள்படும்.

மயானத்திற்குச் செல்லும் வழியெங்கும் பூக்களும் நெற்பொரிகளும் வீசப்பட்டுக் கொண்டிருக்கும். பிணத்துடன் சேர்ந்து தீய ஆவிகள் வருவதால் பிணம் கனக்க ஆரம்பிக்கும் எனவும் அவற்றால் தகனக் கிரியைகள் பாதிப்படையக் கூடும் என்பதாலும் இவ்வாறு வீசப்படுகின்றது. தீய ஆவிகளுக்கு மலர்களின் வாசனையும் நெற்பொரிகள் மீதான ஆசையும் உண்டென்பதால் அவற்றைப் பொறுக்குவதில் அவை ஈடுபடும் என்பது நம்பிக்கையாகும்.

## உடல் மயானத்திற்குக் கொண்டு செல்லல்.

இறந்தவர் உடலை மயானம் கொண்டு செல்லும் போது தலைப்பகுதி பின்னோக்கியும் காற்பகுதி முன்னோக்கியும் கொண்டு செல்லப்படல் வேண்டும். குளிப்பாட்டும் வரையில் சவமெனக் கருதப்பட்ட உடல் கும்பநீரால் குளிப்பாட்டப்பட்டு சுண்ணம் சாத்தப்பட்டதன் பின்னர் சிவம் அல்லது அம்மனாக மாற்றப்படுகின்றது. ஆகையால் கடவுளை எவ்வாறு கொண்டுசெல்ல வேண்டுமோ அவ்வாறே இறந்தவர் உடலையும் கொண்டு செல்லுதல் வேண்டும்.

## சுடுகாட்டில் இடம்பெறும் கிரியைகள் அல்லது சடங்குகள்.

வீட்டில் இடம்பெறும் கிரியைகள் போலவே இறந்தவர் நற்கதி அடைவதற்காக மயானத்திலும் சில சடங்குகள் செய்யப்படுகின்றன. நமது சமய மரபுகளில் இறப்பு என்பது ஒரு முடிபல்ல. அது ஒரு குறிப்பிட்ட உலகிலிருந்து நிலையிலிருந்து வேறொன்றிற்குச் செல்வதாகும். பிரிநிலை,

மாறுநிலை, இணைநிலை என மூன்று நிலைகள் மரணத்தின் பின் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. இதன் காரணமாகவே இறந்தவர்களுக்கான கிரியைகள் சடங்குகள் நிகழ்த்தப்பட்டு இறந்தவரின் ஆத்மா எவ்வித சஞ்சலமும் இல்லாமல் சாந்தியடையச் செய்யப்படுகின்றது. இறந்தவர்களை இருப்பவர் களிடமிருந்து முன்னர் இறந்த மூதாதையர்களுடன் சேர்ப்பிப்பதே ஈமச் சடங்குகளின் உள்நோக்கமாக உரைக்கப் படுகின்றது. இக்கடமைகளைச் செய்வது பிள்ளைகளதும் உரித்துடை யவர்களதும் இன்றியமையாத தவிர்க்க முடியாத, தவிர்க்கக் கூடாத கடமைகளாகும்.

மயானத்தில் வடக்குத் தெற்காக பச்சை விறகுகளை அடுக்கிய சிதை அமைக்கப்பட்டிருக்கும். அதனை இடப்புறமாக மூன்றுமுறை பறைமுழங்கச் சுற்றிவந்து தலை தெற்குப்புறமாக இருக்கும் வண்ணம் உடல் கிடத்தப்படும். பின்னர் உரித் துடையவர்கள் முதலாகவும் கடமை செய்பவர் அதாவது கொள்ளி வைப்பவர் இறுதியாகவும் வாய்க்கரிசி போடுவர். இங்கும் முன்சொன்னது போலவே துடக்கு உரித்துடையவர்கள் மட்டும் வாய்க்கரிசி போடுதல் வேண்டும். ஏனையோர் வாய்க்கரிசி இடுவதாயின் அவர்கள் 31 நாள்கள் துடக்கு காத்தல் வேண்டும்.

சுமங்கலிப் பெண்கள் இறந்தால் அவரின் கணவன் முந்தானையில் முடிந்த தேங்காய், வெற்றிலை, பாக்கு , பழம் என்பவற்றை எடுத்துவைத்து தேங்காயை உடைத்து தாலியைக் கழற்றி எடுத்தல் வேண்டும். அத்துடன் ஏனைய நகைகளையும் அகற்றுதல் வேண்டும். அதன்பின்னராக கிரியை செய்பவர் கொள்ளிக் குடத்தை இடது தோளில் வைத்து தலையை மொட்டாக்குப் போட்டு மூடிய வண்ணம் வலது கையில் கொள்ளியை வைத்தபடி இடப்புறமாக மூன்று முறை சுற்றிவருதல் வேண்டும். கிரியை செய்பவர்கள் பலராக இருப்பின் ஏனையோர் தலையில் கையைவைத்தபடி முன்னேசெல்ல கொள்ளிக்குடஞ் சுமப்பவர் பின்னால் செல்லுதல் வேண்டும். இவ்வாறு சுற்றிவரும்போது ஒவ்வொருமுறையும் தலைமாட்டில் வைத்து கத்தியால் துளையிட்டு ஒழுகும் கும்பநீரை உடலின் மீது புறங்கையால் தெளித்தல் வேண்டும்.

மூன்றாவது முறை சுற்றிவந்ததும் தலைமாட்டில் தெற்கு நோக்கி நின்று பின்புறமாகத் தலையில் கொள்ளியை வைத்துவிட்டு சுமந்துவந்த கொள்ளிக் குடத்தை முன்புறமாகப் போட்டு உடைத்தல் வேண்டும். தற்காலத்தில் கர்த்தா கால் மாட்டிற்குச் சென்று தான் அணிந்துள்ள பூணூல், பவித்திரம் என்பவற்றைக் கழற்றிப் போட்டுவிட்டு விழுந்து வணங்க வேண்டும் என்கிறார்கள். ஆயினும் கொள்ளி வைத்தபின்னர் பிணத்தைப் பார்க்கக் கூடாது என்பதால் தலைமாட்டில் போட்டுவிட்டுத் தன்னுடைய தந்தையை அல்லது தாயை நல்லபடியாக எரித்து சிவனடியில் சேர்ப்பிக்க வேண்டும் எனச்சிதையை வணங்கிவிட்டுத் திரும்பிப்பாராமல் செல்லுதல் வேண்டும். அதன்பின்னர் உரித்துடையவர்களால் நெஞ்சாங்கட்டை வைக்கப்பட்டுச் சிதைக்குத் தீமூட்டப்பட்டதும் கர்த்தா வீடுசெல்ல முடியும். பிசாசுகள் தொடர்ந்து வராமல் இருப்பதற்காக கொள்ளி வைத்தவர் இரும்பினாலான கத்தியை வீடுவரை கொண்டு செல்லுதல் வேண்டும்.

பின்னர் அங்குள்ளவர்கள் உடலை எரிக்கும் பணியைச் செய்வார்கள். இப்பணியிலும் இடத்துக்கு இடம், ஊருக்கு ஊர் வேறுபாடு காணப்படுகின்றது. உடலைப் பெட்டியோடும் மாலைகள் பூக்களோடும் எரித்தல், பூக்கள் மாலைகளை அகற்றிப் பெட்டியிலிருந்து வெளியே எடுத்து எரித்தல் என இம்முறைகள் மாறுபடும். அங்கு தலைமை தாங்குபவர் நிற்கும் நிலையைப் பொறுத்து வேறுசில மாற்றங்களும் இடம்பெறும்.

மயானத்திற்கு வந்த உறவினர் நண்பர்களுடன் கலந்துரையாடி கொடுப்பனவு வழங்கவேண்டியவர்களுக்கு உரிய கொடுப்பனவுகளை வழங்கிவிட்டு வீட்டிற்குச் செல்லுதல் வேண்டும். வீட்டு வாயிலை அடைந்ததும் வாயிலில் வைக்கப்பட்டுள்ள தண்ணீரை வேப்பிலையால் எடுத்துத் தலையில் தெளித்துக் கொண்டு வேப்பிலையை வாயினால் கடித்துத் துப்பிவிட்டு உலக்கையைக் கடந்து வீட்டினுள் சென்று தலைமுழுகுதல் வேண்டும். கொள்ளி வைத்துத் திரும்பும் கர்த்தாவிற்குத் தங்கநகை அணிவிப்பதும் சில இடங்களில் வழக்கமாக உள்ளது.

பின்னர் உறவினர்களால் சமைத்துவரப்பட்ட உணவை இறந்தவருக்குப் படைத்துத் தீபமேற்றி திருமுறை பாடியபின்னர் உரித்துடையவர்களுடன் கூடியிருந்து உண்ணுதல் வேண்டும். இறந்தவர் வீட்டில் உண்ணுவோர், இறந்தவர் உடலிருக்கும் பொழுதோ தொடர்ந்துவரும் நாள்களிலோ அங்கு படுத் துறங்கியோர், அரப்பெண்ணெய் வைப்போர், வாய்க்கரிசி இடுவோர் ஆகியோருக்கு 31 நாள்கள் துடக்கு உண்டு என்பது எமது சமய மரபு. எனவே உரித்துடையவர்கள் மட்டும் இவற்றைச் செய்வது பொருத்தமாகும். ஏனையோர் இவற்றைச் செய்தால் கண்டிப்பாக 31 நாள்களும் துடக்குக் காத்தல் வேண்டும்.

## காடாத்துதல் அல்லது பால் தெளித்தல்.

இறந்தவரை எரித்த அல்லது புதைத்த இடத்தில் எரித்த மறுநாளில் செய்யப்படும் சடங்கு இதுவாகும். இச்சடங்கிலும் இடத்துக்கு இடம் காலத்திற்குக் காலம் மாறுபாடு காணப் படுகின்றது. இறந்த நாளிலிருந்து ஒற்றைவிழுந்த நாளில் இச்சடங்கு இடம்பெறும். தற்காலத்தில் தகனஞ் செய்யப்பட்ட அன்றே இச்சடங்கு நடத்தப்படுகின்றது. இறுதிக் கிரியையின் போது எரித்த வெப்பத்தை ஆற்றுவதால் காடாத்துதல் ( காடு-ஆத்துதல்) எனப்படுகின்றது. புதைக்கப்பட்டிருந்தால் அன்றைய தினமே மூடிய மண்மேடையின் மேல் பாலைத் தெளித்து இளநீரைத் துளையிட்டுத் தலைமாட்டில் வைப்பார்கள்.

காடாற்றுதலுக்குத் தேவையான பொருட்களை எடுத்து வரும் கடமை செய்தவருடன் ஏனைய ஆண்கள் உடன்சென்று இக்கடமையைச் செய்வர். இவ்வாறு கொண்டு செல்லப்படும் பொருட்களை வைத்துச் சுற்றிநின்று பெண்கள் ஒப்பாரி வைத்து அழுவர். ஆயினும் தற்காலத்தில் இது நடைபெறுவதில்லை. அதன்பின்னர் கடமை செய்தவர் அப்பொருட்களை எடுத்துக் கொண்டு முன்செல்ல ஏனைய ஆண்கள் அவரைத் தொடர்ந்து செல்வர். இங்கு செல்பவர்களின் எண்ணிக்கை ஒற்றை எண் அடிப்படையில் இருக்கும். முற்காலத்தில் இறுதிக் கிரியையைச்

செய்த குருவானவரே இக்கடமையைச் செய்விப்பார். ஆனால் தற்காலத்தில் ஊரிலுள்ள நன்கு விபரம் தெரிந்த பெரியவர் ஒருவர் தலைமை தாங்கி இக்கடமையைச் செய்விப்பார்.

உடல் தகனஞ் செய்யப்பட்ட இடத்தை பூரணமாக நீரூற்றி ஆறவைத்த பின்னர் எஞ்சியுள்ள எலும்புகளை முழு ஆளுருவமாக்கி முன்னர் உடலுக்கு அபிடேகஞ் செய்த அதே ஒழுங்கிலேயே அபிடேகஞ் செய்யப்படும். இறுதியாக எலும்புகளை எடுத்து தலைமாட்டில் வைக்கப்பட்டுள்ள மண்பானையில் சேர்த்து வெள்ளைத் துணியினால் மூடிக்கட்டுவர். பின்னர் எஞ்சியுள்ள சாம்பலை அதே இடத்தில் புதைத்துவிடுவர். அல்லது அருகிலுள்ள நீர்நிலையில் கரைத்துவிடுவர்.

அதன்பின்னர் அவ்விடம் மூன்று பாத்திகளாக அமைக்கப்பட்டு நவதானியங்கள் விதைக்கப்பட்டு உழுதுவிடப்படும். இதற்கென இரண்டு தடிகளை இணைத்து கலப்பை போன்ற அமைப்பைச் செய்து வைத்திருப்பர். அம்மூன்று பாத்திகளிலும் கொண்டுவரப்பட்ட நிவேதனப் பொருட்களைப் படைத்து திருமுறை ஓதிய பின்னர் கொண்டு சென்ற இளநீரை வெட்டுவர். எலும்பு சேகரிக்கப்பட்ட மண்பானையை புனித தீர்த்தக் கரைக்கு எடுத்துச் சென்று கடமை செய்தவர் தலைக்கு மேலால் பின்புறமாக நீரில் வீசிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வீட்டிற்குத் திரும்புவர்.

இச்சடங்கு செய்வதால் எரித்ததால் ஏற்பட்ட வெம்மை தணிவதோடு இறந்தவரது குடும்பத்தவர்கள் தழைத்து வாழ்வார்கள் என்று நம்பப்படுகின்றது. பெண்கள் இப்பால் தெளித்தல் மற்றும் காடாத்தும் சடங்கில் கலந்து கொள்வதில்லை. அவர்கள் ஆண்கள் சென்றவுடன் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்து அழுது துயரைப் பகிர்ந்து கொண்டு இறந்தவரின் உடலிலிருந்து உயிர்பிரிந்த அல்லது உடல் வைக்கப்பட்டிருந்த இடத்தில் ஒரு கலயத்தில் பாலை வைத்து ஒவ்வொருவரும் ஒரு கரண்டியால் பாலை எடுத்து மூன்றுமுறை அக்கல யத்திலேயே விடுவார்கள். பின்னர் அக்கலயத்தை எடுத்துச்

சென்று நீர்நிலையில் ஊற்றி விடுவர். ஆடவர்கள் வந்தபின்னர் அனைவரும் நீராடி உணவுண்பர். இம்முறையும் தற்காலத்தில் அருகிவருகின்றது.

**எட்டுச்செலவு அல்லது எட்டுச்சடங்கு அல்லது எட்டுப்படையல்.**

இறந்த நாளிலிருந்து ஒற்றை விழுந்த நாளில் அதாவது 3ஆம் அல்லது 5ஆம் அல்லது 7ஆம் நாளில் இச்சடங்கு செய்யப்படும். ஒரு நாற்காலியில் இறந்தவர் பயன்படுத்திய ஆடைகளைக் கொண்டு அவரைப்போல ஓர் உருவம் அமைத்து அவரது புகைப்படத்தையும் வைத்து அவர் பயன்படுத்திய அணிகலன்களையும் வைத்து அவர் இருப்பது போன்றதொரு பாவனையை ஏற்படுத்துவர். இறந்தவரின் குடும்பத்தவரும் துடக்கு உரித்துடையவர்களும் எண்ணெய் தேய்த்து நீராடி இறந்த வருக்குப் பிடித்தமான அனைத்துவகை உணவுகளையும் சமைத்து இனிப்புகள் நீராகாரங்கள் என்பவற்றையும் அவரது உருவத்திற்கு முன்னால் ஒரு வெள்ளைச் சீலை விரித்து அதன்மேல் வாழை இலைகளைப் பரப்பிப் படைப்பர். தூப தீபங்காட்டித் திருமுறைகளை ஓதிய பின்னர் அனைவரும் வெளியே சென்று சிறிது நேரம் கதவுகள் ஜன்னல்களை மூடிவிடுவர். இறந்தவர் தனது மூதாதையர்களுடன் வந்து அவ்வுணவுகளை உண்பதற்காக இந்தச் செயற்பாடு இடம்பெறுகின்றது.

அதனையடுத்து படைக்கப்பட்ட அனைத்து உணவுப் பண்டங்களிலும் சிறிதளவு எடுத்து தயாராக வைக்கப்பட்டுள்ள ஓலைப் பெட்டியில் வைத்து எடுத்துக்கொண்டு ஓர் இளநீர் ஒரு தீப்பந்தம் என்பவற்றோடு வீட்டிற்கு வெளியே கொண்டு சென்று ஒரு முச்சந்தியில் படைத்து இளநீரை வெட்டிக் கற்பூரத்தையும் தீப்பந்தத்தையும் ஏற்றிவிட்டுத் திரும்புவர். இச்சமயத்தில் சிறுவர்கள் கலந்து கொள்ளவோ முன்னிற்கவோ அனுமதிக்கப் படுவதில்லை. தற்காலத்தில் முச்சந்திகளில் படைக்காமல் தகனஞ்செய்யப்பட்ட மயானத்திலேயே படைக்கும் வழக்கம் உருவாகியுள்ளது.

வீட்டிற்குத் திரும்பிய பின்னர் கைகால் முகங்கழுவி எஞ்சியுள்ள உணவுகளை குடும்பத்தவர்களும் துடக்கு உரித்துடைய உறவினர்களும் கலந்து உண்டு நிறைவு செய்வர்.

இவ்வெட்டுச் சடங்கின்போது சைவ உணவுகளை மட்டும் படைக்கவேண்டும். இறந்தவர் மாமிசம் புசிப்பவராகவும் மதுபானம் அருந்துபவராகவும் இருப்பின் பிறிதொரு நாளில் மாமிச உணவுகளையும் குடிபானங்களையும் படைப்பர். சைவ உணவு படைக்கும் வேளையில் தேங்காய் எண்ணெய் விளக்கும் மாமிச உணவு படைக்கும் வேளையில் மண்ணெண்ணெய் விளக்கும் ஏற்றப்படுவதும் வழக்கமாகும். சில இடங்களில் சபிண்டீகரணம் நிறைவுறும் வரையில் மாமிச உணவுகள் படைப்பது தவிர்க்கப்படுகின்றது.

எட்டுச் சடங்கில் கலந்து கொண்ட துடக்கு உரித்தற்ற உறவினர்கள், நண்பர்கள் அவ்வீட்டில் எதுவும் உண்ணாமல் தங்கள் வீடுகளிற்குச் சென்றதும் நீராடுவர். அவர்கள் அங்கு உணவு உண்டால் அவர்களுக்கும் 31 நாள்கள் துடக்கு உண்டாகும். அந்தியேட்டி முடிவடையும் வரைக்கும் இறந்தவருக்காக இரவில் தீபம் ஏற்றி நீர் நிரம்பிய பாத்திரம் ஒன்றையும் அவரது உடல் இருந்த இடத்தில் வைத்தல் வேண்டும். இறந்தவர் முப்பத்தொரு நாள்களும் அவ்வீட்டையே சுற்றி வருவதாகவும் அவரது தாகத்தைப் போக்குவதற்காகவுமே இவ்வேற்பாடு செய்யப்படுகின்றது.

## அந்தியேஷ்டி, சபிண்டீகரணம்.

இறந்தவர் பொருட்டு இறுதியாகச் செய்யப்படும் சடங்கு என்பதால் அந்தியேஷ்டி எனப் பொருள்படும். இச்சடங்கின் மூலமாக சமய ஆசாரம், அனுட்டானத்தில் ஏற்பட்ட குறைகள், தவறுகள் நீங்கப்பெறும் என்பது ஐதீகம்.

அந்தியேஷ்டியானது சமய அந்தியேஷ்டி, விசேட அந்தியேஷ்டி, நிர்வாண அந்தியேஷ்டி என மூன்று வகைப்படும்.

இது சமய, விசேட, நிர்வாண தீட்சை உடையவர்களுக்கு அவர்கள் பெற்றுள்ள தீட்சையின் அடிப்படையில் செய்யப்படும். விசேட, நிர்வாண அந்தியேஷ்டியும் சைவ ஆசாரம் உள்ள மாமிசம் உண்ணாத சமய தீட்சை உடைய சைவர்களுக்குச் செய்யப்படும் சமய அந்தியேஷ்டியும் பிரேதத்தில் மயானத்தில் செய்யப்படும். ஏனையோருக்கான அந்தியேஷ்டி இறந்து 26ஆம் நாளின் மேல் 30 ஆம் நாளுக்குள் செய்யப்படும். இவ்வந்தி யேஷ்டி செய்வதாயின் இறந்தவரும் கிரியை செய்பவர்களும் தூய சைவபோசனம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். தற்காலத்தில் மயானத்தில் செய்யாமல் வீட்டிலேயே இச்சடங்கு செய்யப்படுகின்றது.

மகன் தவிர்ந்த ஏனையோர் கடமை செய்தால் அந்தியேஷ்டிக் கிரியை நாள் பார்த்துத்தான் செய்யப்படல் வேண்டும். நந்தை, பத்ரை, திரயோதசி தவிர்ந்த திதிகளும், செவ்வாய், வியாழன், வெள்ளி தவிர்ந்த வார லக்கினங்களும் திரியாத நட்சத்திரம் தவிர்ந்த ஏனைய நட்சத்திரங்களிலும் பாபக்கிரகம் பலமுண்டான சமயத்தில் இக்கருமம் செய்யலாம். (நந்தை- பிரதமை, ஷஷ்டி, ஏகாதசி) (பத்ரை- துதியை, ஸப்தமி, துவாதசி) (திரியாத நட்சத்திரம் - கார்த்திகை, உத்தரம், உத்தராடம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி)

அந்தியேஷ்டி செய்வதற்கு உகந்த இடங்களாக வீடு (கிணற்றடி), ஆற்றங்கரை, குளக்கரை, சமுத்திரக்கரை என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. இதற்காக குறைந்தபட்சம் ஐந்து முழம் முதல் ஒன்பது முழம் வரையான நீள அகலங்கொண்ட மண்டபம் அமைத்தல் வேண்டும். இம்மண்டபத்திற்கு நான்கு, அல்லது பன்னிரண்டு அல்லது பதினாறு கால்கள் அமைக்கப்படலாம். பந்தலின் மேலே வெள்ளை விதானம் கட்டி நிலத்தினைச் சாணத்தினால் மெழுகவேண்டும். சுற்றிவர முன்னர் இறுதிக் கிரியைக்கு அமைத்தது போல மாவிலை, தோரணம், பூமாலை என்பன கொண்டு அலங்கரிக்க வேண்டும். மண்டபத்தின் நான்கு பக்கங்களிலும் வாயில் அமைத்து தெற்கில் பிரதான வாயில் அமைத்து மண்டபத்தை ஒன்பது பதமாக்கவேண்டும்.

நடுப்பதத்தில் ஓமகுண்டமும் வடமேற்கில் சிவகும்பமும் வடகிழக்கில் வர்த்தனி-பாசுபதாஸ்திர கும்பமும் தென்மேற்கில் பஞ்சகௌவிய மேடையும் தென்கிழக்கில் சிதாவஸ்து தானம் (பிரேத தகன இடம்) ஆகியவற்றையும் சுற்றுப்புறத்தில் தசாயுத கும்பங்களையும் வைத்தல் வேண்டும். அமைக்கப்படும் கும்பங்களில் மூன்று மாவிலைகளே வைக்கப்படல் வேண்டும் சில இடங்களில் சில குருமார்கள் ஐந்து மாவிலைகள் வைக் கலாம் எனச் சொல்கிறார்கள்..

சிதாவாஸ்து தானத்தை வடக்குத் தெற்காக நீண்ட சதுரமாக்கி இருபத்தைந்து பதமாகப் பிரித்து நடுப்பதம் ஐந்திலும் மஞ்சள் மாவும் தென்மேற்கில் நாலு பதத்தில் வெள்ளை மாவும் தென்கிழக்கில் நாலு பதத்தில் சிவப்பு மாவும் வடகிழக்கில் நாலுபதத்தில் கறுப்பு மாவும் வடமேற்கில் நாலு பதத்தில் பச்சை மாவும் வடக்கில் உள்ள ஒரு பதத்தில் சிவப்பு மாவும் மேற்கில் உள்ள ஒரு பதத்தில் வெள்ளை மாவும் தெற்கில் உள்ள ஒரு பதத்தில் கறுப்பு மாவும் கிழக்கில் உள்ள ஒரு பதத்தில் மஞ்சள் மாவும் இட்டுக்கொள்ளல் வேண்டும். புத்தளிகை - தகனஞ் செய்வதற்காகப் பிரேதம் போலச் செய்யப்படும் தருப்பையானது முப்பத்தாறு தர்ப்பைகளை இடப்பக்கமாக முடிந்து ஐவைந்து தர்ப்பைகளால் கைகளும் பதின்மூன்று தர்ப்பைகளாகப் பிரித்து கால்களையும் ஆக்குதல் வேண்டும்.

நீராடிச் சந்தியாவந்தனம் முடித்து வரும் குருவானவர் மண்டபத்தின் தெற்கு வாயிலால் புகுந்து சிவகும்பத்திற்கு தெற்கில் வடக்கு நோக்கி இருந்து கிரியை செய்பவருக்கு விபூதி கொடுத்து சங்கற்பஞ் செய்து கொண்டு சளீகரணம், பூதசுத்தி. மந்திரசுத்தி, அந்தர்யாகம், சிவகஸ்தம் செய்து சிவோகம் பாவனை முடித்து ஞானகட்கதாரணம் செய்தல் வேண்டும். பஞ்சகௌவிய பூசை முடித்து யாகமண்டபத்தையும் கிரியை செய்பவரையும் புத்தளிகையையும் பஞ்சகௌவியத்தால் தெளித்தல் வேண்டும். சூர்ணோற்சவம் - சுண்ணம் இடித்து சுண்ணப்பொடி சாத்திப் புத்தளிகைக்கு அபிடேகஞ் செய்தல் வேண்டும். முன்னர் பிரேதத்திற்கு எவ்வாறு அபிடேகஞ்

செய்யப்பட்டதோ அதே ஒழுங்கில் செய்யப்படல் வேண்டும். பதினெட்டு சமஸ்காரங்களையும் மனத்தினாலே செய்து நெற்பொரி முதலியவற்றை மண்டபத்தில் தூவி மிகுதியை ஈசானத்தில் பாசுபதாஸ்திர வர்த்தனி ஆசனத்தில் இடவும்.

சிதாவாஸ்து பூசை, வர்த்தனி பூசை, பாசுபதாஸ்திர பூசை செய்து யாகத்தைக் காத்துக் கொள்ளும்படி வேண்டித் தசாயுத பூசையும் செய்துகொள்ளல் வேண்டும். தசாயுத பூசை முடியும்வரை பாதுகாக்க வேண்டும் எனத் தேவர்களிடம் சிவாஞ்சையைத் தெரிவித்தல் வேண்டும். பின்னர் சிவகும்ப பூசை, சிவாக்கினி காரியம், பிராயச்சித்த செபம், நாடீசந்தானம், மிருதக தீட்சை செய்து சிதாவஸ்து தானத்தில் பூசித்த ஐவகை மாவையும் இட்டு அதன்மேல் புத்தளிகையை வைத்து அரப்பெண்ணெய் வைத்து வாய்க்கரிசி இட்டுக் கொள்ளிவைத்துக் குடமுடைத்து தகனஞ் செய்தபின்னர் காடாற்றிப் புத்தளிகைச் சாம்பலை ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

## நக்னதானம்.

இறந்தவருக்கு ஏற்படக்கூடிய பசி, தாகம், குளிர் போன்றவற்றை நீக்கும் பொருட்டுச் செய்யப்படும் தானம் நக்ன தானம் எனப்படும். குடும்பத்தவராய் உள்ள ஆசாரியாருக்கு அரிசி, காய்கறி, வஸ்திரம் என்பவற்றைத் தானமாகக் கொடுத்தல் வேண்டும். உயர் தீட்சை பெற்றவர்களுக்கு பிரேத தகனஞ் செய்தவுடன் இத்தானம் கொடுக்கப்படும்.

## துர்மரணப் பிராயச்சித்தம்.

இயற்கையாக உயிர் பிரியாமல் தன்னுயிரைத் தானே மாய்த்துக் கொள்ளல் (தற்கொலை) அல்லது வேறு காரணங்களால் ஏற்படும் மரணம் துர்மரணம் எனப்படும். தீயில் எரிதல், நீரில் மூழ்குதல், நஞ்சுண்ணல், விசப்பிராணிகள் கடித்தல், ஆயுதங்களால் தாக்கப்படுதல் விபத்துகள் போன்ற காரணங்களால் ஏற்படும் மரணம் துர்மரணம் எனப்படும்.

இத்துர்மரணம் புத்திபூர்வம், அபுத்தி பூர்வம் என இருவகைப்படும். தன்னுயிரைத் தானே போக்கிக் கொள்ளல் புத்திபூர்வம் எனப்படும். எதிர்பாராத விதமாக உயிர்பிரிதல் அபுத்திபூர்வமாகும். அபுத்திபூர்வ மரணத்தில் சாதாரண மரணம்போலவே கிரியையும் ஆசௌசமும் கொள்ளப்படும். இதில் தேகம் பின்னப்பட்டிருந்தால் ஆசௌச முடிவில் பிரதித்தேகத்தில் அதாவது புத்தளிகையில் புனர்தகனம், அந்தியேஷ்டி என்பன செய்தல் வேண்டும். புத்திபூர்வ துர்மரணத்தில் சாதாரண அக்கினியில் தகனஞ்செய்து ஒருவருடம் அல்லது ஆறுமாதம் அல்லது மூன்று மாத முடிவில் இறந்த திதியில் தர்ப்பையால் செய்யப்பட்ட பிரதித் தேகத்தில் அந்தியேஷ்டி செய்யப்படும். துர்மரணமடைந்தோர் பிசாசு உருவத்தில் அலைந்து திரிவர் எனக்கருதப்படுவதால் பிசாசு உலக அதிபதியான வைரவருக்கு சாந்தி செய்தபின்பே அந்தியேஷ்டி செய்யப்படும்.

## பாஷாணத் தாபனம்

இறந்தவருடைய ஆன்மாவைக் கல்லிலே பூசித்தல் பாஷாண பூசை எனப்படும். இதனையே கல்லுப்பூசை என்பர். இதில் செய்யப்படும் கிரியைகள் ஆன்மாவின் பசி, தாகம் நீங்கும் பொருட்டும் பிரேத வடிவம் நீங்கும் பொருட்டும் ஆன்மாவின் உணவு விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டுமாகும்.

இக்கிரியை வீட்டில் மண்டபம் அமைத்து விரிவாகச் செய்யலாம். பிரேதத்தில் அந்தியேஷ்டி செய்பவர்கள் வீட்டிலே பாஷாணத்தாபனம் செய்து விரிவாகப் பூசை செய்வர். இக்காலத்தில் தர்ப்பை சுடுதல் நிறைவெய்தியதும் அந்தியேட்டி மடத்திலேயே இக்கிரியை நிகழ்த்தப்படுகின்றது.

மண்டபத்தில் வேதிகை அமைத்து வடக்கு முகமாக கும்பம் வைத்து இறந்தவர் பெற்றுக்கொண்ட தீட்சைக்கு அமைவாக உருத்திரர், ஈசுவரர், சதாசிவர் ஆகியோரில்

ஒருவரைப் பூசித்தல் வேண்டும். ஒரு பாத்திரத்திலே கல்லினைக் கூர்ச்சங்கட்டி வடக்கு முகமாக வைத்து அதில் இறந்தவருடைய ஆன்மாவை ஆவாகனஞ் செய்து எண்ணெய் . அரிசிமா முதலிய அபிடேகத் திரவியங்களால் முறைப்படி அபிடேகித்தல் வேண்டும். உருத்திரபலி இட்டு அதன்பின்னர் பிரேதபலி எனப்படும் பேருணவு படைத்து தீபாராதனை காட்டித் தோத்திரம் செய்தல் வேண்டும். பின்னர் சுற்றத்தவர் பூவும் நீரும் இட்டு அஞ்சலி செய்தல் வேண்டும்.

கல்லிலே பூசித்த ஆன்மாவைக் கும்ப மூர்த்தியிடத்தும் கும்ப மூர்த்தியை அதற்குரிய இடத்திலும் ஒடுக்கி கும்பம் கல், பிண்டம், சாம்பல் முதலியவற்றை சமுத்திரம் முதலான நீர் நிலைகளில் விடுதல் வேண்டும்.

நீர் நிலையில் மார்பளவு தண்ணீரில் வடக்கு முகமாக நின்று பிண்டத்தை முதலிலும் கும்பத்தை அடுத்தும் பாஷாணத்தைப் பின்னருமாக விட்டு நீராடி வீட்டிற்கு வருதல் வேண்டும். வீட்டு வாசலில் வேப்பிலையைக் கடித்துத் துப்பி ஆசமனஞ் செய்து அக்கினி, தண்ணீர், கோமயம், வெண்கடுகு, இவைகளைத் தொட்டு உலக்கையைக் கடந்து வீட்டினுள் செய்லுதல் வேண்டும்.

இதுவரையான கிரியைகள் அனைத்தும் சைவக் குருமார்களினாலும் பின்வரும் கிரியைகள் பிராமணக் குருமார்களினாலும் செய்யப்படுவது வழக்கமாகும்.

## ஆசௌசக் கழிவு அல்லது துடக்குக் கழிவு.

சாதாரணமானவர்களுக்கு ஆசௌசம் முப்பது இரவு முடிந்தபின்னர் அதாவது முப்பத்தோராம் நாள்காலையில் தான் நிறைவடையும். சுத்த சைவ போசனமுடையவர்களாயும் நித்திய சந்தியா வந்தனம் செய்பவர்களையும் மாமிசம் உண்பவர்களுடன் கலப்பின்றியும் இருப்பவர்களுக்கு பதினாறாம் நாளில் ஆசௌசம் நீங்கும்.

அந்தியேட்டி செய்பவர்கள் வீட்டை விட்டுப் புறப்பட்ட பின்னர் வீட்டைக் கழுவிச் சுத்தஞ் செய்து அனைவரும் நீராடி பிராமணக் குருக்களைக் கொண்டு புண்ணியாக வாசனம் செய்து ஆசௌசம் நீக்கலாம். அதன் பின்னரே பாஷாணப் படையலுக்கு உணவு தயாரித்தல் வேண்டும். ஆசௌசம் நீங்கிய மறுநாளில் ஏனைய கிரியைகளைச் செய்யலாம்.

(இந்த ஆசௌசம் தொடர்பான விரிவான விபரங்கள் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.)

## வீட்டுக் கிரியைகள்.

இறப்புத் துடக்கு நீங்கிய மறுநாள் வீட்டுக் கிரியைகள் செய்யப்படல் வேண்டும். இறப்பு நடந்த வீட்டிலேயே இச்சடங்குகள் இடம்பெறும். அந்நாளில் முற்றத்தில் சிறு இடத்தை பசுஞ்சாணத்தினால் மெழுகி தலைவாழை இலையை தலைப் பக்கம் வடக்கு அல்லது கிழக்கு நோக்கி இருக்கத் தக்கதாக வைத்து அதன்மேல் பச்சை அரிசியைப் பரப்பி பூரண கும்பம் வைக்கப்படல் வேண்டும். அபரக்கிரியைகள் ஆயின் பச்சை அரிசியிலும் சுபக்கிரியைகளாயின் நெல்லிலும் பூரணகும்பம் வைக்கப்படும். குத்துவிளக்கு ஒன்றில் ஒற்றைத் தீபம் ஏற்றி பசுஞ்சாணத்தினால் பிள்ளையார் பிடித்து வைத்து வீட்டு வாயிலில் மாவிலைகள் ஒற்றை எண் அடிப்படையில் கட்டப்படல் வேண்டும்.

இவ்வீட்டுக் கிரியைகளை பிராமணக் குருமாரே செய்வார்கள். ஒருவர் குருக்களாகவும் ஏனையோர் அர்ச்சகர் களாகவும் இருப்பர். ஆகக் குறைந்தது இருவர் முதல் அவரவர் வசதிக்கேற்ப அந்தணர்களை அழைத்து கிரியைகளைச் செய்வித்து அவர்களுக்கு தானம் வழங்குதல் வேண்டும். முழுத்தானத்தையும் ஒருவரே கொண்டு செல்லாமல் பலருக்கு வழங்கினால் இறந்தவர் பெயரினால் அவர்கள் அன்றைய தினம் மகிழ்ச்சி அடைந்து இறந்தவரின் ஆத்மசாந்திக்கு பிரார்த் திப்பார்கள்.

## அனுக்ஞை

கிரியைகளின் ஆரம்பமாக அனுக்ஞை எனப்படும் சங்கற்பஞ் செய்தல் இடம்பெறும். கிரியை செய்பவர் ஒரு வாழை இலையில் மூன்று தர்ப்பை, பவித்திரம், எள்ளு, தாம்பூலம், உபவீதம் (பூணூல்) காசு என்பவற்றை தலையில் அல்லது இடது தோளில் வைத்து இடப்புறமாக மூன்று முறை சுற்றி இன்ன வருடம் , அயனம், ருது, மாதம், பட்சம், நட்சத்திரம், திதி, வாரம் கூடிய சுபதினத்திலே இறந்தவருக்கு சிரார்த்தம் செய்கிறேன் அதற்கு அதிகாரம் கொடுக்கவேண்டும் என்று குருவிடம் வேண்டுவார். அதற்கு அவர் தந்தோம் என்று தர்ப்பையைக் கிரியை செய்பவரிடம் கொடுக்க அதை அவர் இடுப்பில் செருகிக் பொண்டு வலது கை மோதிர விரலில் பவித்திரத்தையும் (தர்ப்பை) இடத்தோளில் உபவீதத்தையும் (பூணூல்) அணிந்து கொள்ளல் வேண்டும்.

## சூரிய பூசை.

தொடர்ந்து சூரிய பகவானிடம் ஆசி பெறுவதற்காக சூரிய பூசை செய்யப்படும். சிவப்புநிறப் பூவும் தண்ணீரும் கொண்டு மூன்றுமுறை ஆத்ம பிரதட்சணம் செய்து சூரிய பகவானை வணங்கிச் செய்யப்போகும் சிரார்த்தத்திற்குச் சாட்சியாக இருந்து அருள வேண்டும் எனப்பிரார்த்தித்து முற்றத்தில் வைக்கப்பட்டுள்ள கும்பத்தில் பூவையும் நீரையும் போட்டு வணங்குதல் வேண்டும். தந்தைக்கு அல்லது தாய்க்கு கோதானம், இரண்யதானம், இடபதானம், ஏகோதிட்டம், பஞ்சதச (பதினைந்து) மாசியம் , சோதகும்ப சிரார்த்தம், சபிண்டீகரணம் முதலியன செய்யப்போகிறேன் என்று சொல்லிச் சங்கற்பம் செய்து கொள்ளல் வேண்டும்.

### வீட்டுக் கிரியையின் போது வழங்கப்படும் தானங்கள்.

1. கோதானம்
2. இரண்யதானம்
3. வஸ்திரதானம்
4. இடபதானம்

5. ஏகோதிட்டம்
6. ஊனமாசிகம்
7. திரிபட்ச மாசிகம்
8. ஊனசாண் மாசிகம்
9. ஊன ஆப்திக மாசிகம்
9. மாத மாசிகங்கள் (11)
10. சபிண்டீகரண தானம்
11. யாத்ரா தானம்.

ஆரம்பத்தில் புண்ணியாக வாசனம் செய்து மண்டப சுத்தி செய்யப்பட்ட பின்னர் குருவானவர் தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை என்பவற்றைக் கிரியை செய்தவரிடம் கொடுத்து சுவாமி அறையில் கொண்டு சென்று வைக்குமாறு கூறுவார். அதன் பின்னரே ஆசௌசம் காரணமாக விளக்கு ஏற்றப்படாதிருந்த வீட்டில் விளக்கு ஏற்றலாம்.

அதனைத் தொடர்ந்து கோதானம், இரண்யதானம், வஸ்திரதானம் என்னும் பெயர்களிலான மூன்று தானங்கள் வழங்கப்படும். இறந்தவரின் ஆன்ம ஈடேற்றம் காரணமாகவே தானங்கள் வழங்கப்படுகின்றன.

## இடபதானம்,

இறந்தவருடைய தான தருமங்களின் பலனை தருமத்தின் வடிவாயுள்ள இடபத்தின் மூலமாகச் சிவபெருமானிடத்தில் சேர்க்கும் பொருட்டு இத்தானம் வழங்கப்படுகின்றது. இடபத்தை அதவாது ஆண் மாடு ஒன்றைத் தானமாக வழங்க முடியாத சந்தர்ப்பத்தில் ஒரு பெரிய தாம்பாளத்தில் பச்சை அரிசியைப் பரப்பி அதில் இடபத்தின் வடிவைக் கீறி அதன்மேல் தேங்காயை வைத்து கிரியை செய்பவர் அத்தாம்பாளத்தை நான்கு திசைகளிலும் இழுத்து உரிய மந்திரங்களைக் குருவானவர் கூற தட்சணையையும் வைத்து அத்தாம்பாளத்தை அந்தணர் ஒருவருக்குக் கொடுத்தல் வேண்டும்.

## ஏகோதிட்டம்.

இது இறந்தவர் ஒருவரை மட்டும் குறித்துச் செய்யப்படும் தானமாகும். இதனாலேயே இத்தானம் ஏகோதிட்டம் என அழைக்கப்படுகின்றது. இத்தானத்தைப் பெறுவதற்கு வருகை தந்துள்ள அந்தணரை மேற்குமுகமாக ஓராசனத்தில் இருத்தி அவருக்கு நல்லெண்ணெய், அரப்பு, எலுமிச்சம்பழம் கொடுத்து நீராடுவதாகப் பாவனை செய்து வேட்டி, சால்வை, சந்தனம், பூ என்பவற்றைச் சாத்தி அரிசி, மரக்கறி என்பவற்றைக் கொடுத்துப் பூசிக்க வேண்டும்.

இதற்காகத் தரையைச் சுத்தி செய்து தலைவாழை இலையைப் போட்டு ஒரு தர்ப்பையைத் தெற்கே நுனி இருக்கும் வண்ணம் வைத்து ஒரு பிண்டம் இடவும். பச்சை அரிசிமா, உழுந்துமா, எள், பால், தயிர், நெய், தேன், வாழைப்பழம் ஆகிய எட்டுப் பொருட்கள் சேர்த்து பிண்டம் சேர்க்கப்படும். கிரியை செய்பவர் தெற்கு முகமாக இடது முழந்தாளையும் இடது கையையும் ஊன்றியிருந்து கைமாறிப் பிண்டம் இடவும். சந்தனம், பூ சாத்தி, வெற்றிலை, பாக்கு, பழம், இளநீர், நைவேத்தியம் நிவேதித்து தர்ப்பணஞ் செய்து நமஸ்காரம் செய்து கொண்டு தமது சக்திக்கு ஏற்றவாறு தானம் கொடுக்கவும்.

இத்தானத்தினால் இறந்தவருடைய ஆன்மாவானது உலக வாழ்வில் ஓரளவு திருப்தியடையும். இதில் இருபத்து நான்கு தானங்கள் கூறப்பட்டுள்ளன. அவையாவன பவித்திரம், பூணூல், கமண்டலம், உருத்திராக்கம், பாதுகை (மிதியடி அல்லது செருப்பு) தண்டம், கௌபீனம், விபூதிப்பை, யோகபட்டம், குடை, குல்லாய், மேல் வஸ்திரம் (சால்வை), வஸ்திரம், பொன், மோதிரம், இரத்தினம், நெய், வெண்ணெய், பசு, பூமி, போசனத்திற்கு வேண்டிய பொருள்கள். சர்வதானியங்கள், சர்வ அலங்காரப் பொருள்கள், தாசீ, தாசர்கள் என்பனவாம். இவற்றில் இயன்றனவற்றைத் தானமாகக் கொடுத்து இத்தானங்களை ஏற்றுக்கொண்ட குருவிற்குத் தட்சணைகள் கொடுத்து வழியனுப்பி மஞ்சள் நீர் தெளித்து இடத்தைச் சுத்தஞ் செய்து கொண்டு கிரியை செய்பவர் கைகால் கழுவி அல்லது நீராடிவந்து

பஞ்சகௌவியம் பருகிக் கொள்ளவும். இதற்கென ஏகோதிட்டம் வழங்கப்பட்டதும் குருவானவர் ஒரு புண்ணியாகவாசனம் செய்திருப்பார்.

## மாசியம் அல்லது மாசிகம்.

இறந்த வருடத்தில் மாதந்தோறும் செய்யப்படும் சிரார்த்தமே மாசிகம் எனப்படுகின்றது. இது மாதந்தோறும் இறந்த திதியில் செய்யப்படும். முதலாவது மாசிகம் ஏகோதிட்டம் என்னும் பெயரில் முதலில் செய்யப்பட்டுவிடும். இரண்டாம் மாதம் தொடக்கம் பதினொரு மாத மாசிகமும் ஊனமாசிகம், திரிபட்ச மாசிகம், ஊனசாண் மாசிகம், ஊன ஆப்திக மாசிகம் எனப் பதினைந்து மாசிகங்கள் செய்யப்படல் வேண்டும். மாத மாசிகங்கள் குறிப்பிட்ட திதியிலும் ஏனைய மாசிகங்கள் நான்கும் தோசம் இல்லாத நாள்களிலும் செய்யப்படல் வேண்டும்.

வெள்ளிக்கிழமைகளிலும், நந்தை, சதுர்த்தசி, அமாவாசை, என்னும் திதிகளிலும் கார்த்திகை, ஆயிலியம், பூரம், கேட்டை, மூலம், பூரட்டாதி என்னும் நட்சத்திரங்களிலும் திரிபுஷ்கர யோகம், துவிபுஷ்கரயோகம் என்பவற்றிலும் ஊனமாசிகங்கள் செய்தல் ஆகாதென நூல்களில் விதந் துரைக்கப்பட்டுள்ளது.

1. **ஊனமாசிகம்**

இறந்த நாள்முதல் இருபத்தேழு நாளின் மேல் மூன்று நாள்களுக்குள் தோஷமில்லாத நாளில் இது செய்யப்படும். இம்மாசியம் துடக்குக் காலப்பகுதிக்குள் வருவதால் வீட்டுக் கிருத்தியத்துடன் சேர்த்துச் செய்யப்படுகின்றது.

2. **திரிபட்ச மாசிகம்**

இறந்த நாள்முதல் நாற்பத்தைந்தாம் நாளுக்கிடையில் தோஷமில்லாத நாளில் செய்யப்படும்.

3 **ஊனசாண் மாசிகம்..**

இறந்த நாளில் இருந்து நூற்று எழுபதாம் நாள்முதல் நூற்றெண்பதாம் நாள்களிற்கிடையில் தோஷமில்லாத நாளில் செய்யப்படும்.

4. **ஊன ஆப்திக மாசிகம்**

இறந்த நாளில் இருந்து முந்நூற்றைம்பதாம் நாள்முதல் முந்நூற்றைம்பத்தைந்தாம் நாள்களிற்கிடையில் தோஷமில்லாத நாளில் செய்யப்படும்.

5. **மாத மாசிகங்கள்.-11**

மாதந்தோறும் இறந்த திதியில் செய்யப்படும்.

இவ்வாறாகப் பதினைந்து மாசிகங்களும் செய்ததன் பின்னர் வருட முடிவில்தான் சபிண்டீகரணம் செய்தல் வேண்டும். ஆயினும் தற்காலத்தில் கிரியை செய்பவருக்கு ஏற்படக் கூடிய அசௌகரியங்களைக் கருத்தில் கொண்டு ஆசௌச முடிவில் பதினைந்து மாசிகங்களையும் ஒன்றாகச் செய்து முடித்துச் சபிண்டீகரணமும் செய்து முடிக்கப்படுகின்றது. இப்படிச் செய்தாலும் பின்னரும் உரிய காலங்களில் உரிய மாசி கங்களைச் செய்தல் வேண்டும். அந்தணரை அழைத்துச் செய்ய முடியாவிட்டாலும் அன்றைய தினத்தில் வீடுவாசல் கழுவி நீராடிச் சுத்தமாக உணவு சமைத்து இறந்தவரின் படத்தின் முன்னால் படைத்து தூபதீபம் காட்டித் தேவார பாராயணஞ்செய்து வணங்குதல் வேண்டும்.

பதினைந்து மாசிக முடிவில் சபிண்டீகரண சிரார்த்தம் செய்யப்பட்ட பின்னரே கிரியை செய்த ஒருவருடைய ஆசௌசம் முற்றாக நீங்கும். இந்த அடிப்படையிலேயே முன்னர் கிரியை செய்த ஒருவர் ஓராண்டிற்கு ஆலயத்தினுள் செல்வதோ சுபக்கிரியைகள் செய்வதோ தவிர்த்தல் வேண்டும் என விதிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் தற்போது 31 ஆம் நாளிலேயே அனைத்தும் நிறைவு செய்யப்படுவதால் ஓராண்டு காலம் ஆசௌசம் காக்கத் தேவையில்லை என்ற கருத்தும் நிலவுகின்றது.

**சோதகும்ப சிரார்த்தம்**

இறந்த ஆன்மாவின் தாகம் தீரும் பொருட்டு இறந்தநாள் முதலாக வருடம் முந்நூற்றி அறுபத்தைந்து நாளும் இத்தானம் செய்தல் வேண்டும். இவ்வாறு செய்வதற்கு வசதிகள் இல்லாத காரணத்தால் தற்காலத்தில் இத்தானம் சபிண்டீகரணத்துக்கு முன்னர் செய்யப்படுகின்றது.

## சபிண்டீகரணம்.

பிண்டங்களை ஒன்று சேர்த்தல் என்பது இதன் பொருளாகும். இதிலே பிதிர் வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும் மாத்ரு வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும் நிமித்தருக்கு அதாவது இறந்தவருக்கு ஒரு பிண்டமும் இடப்படும். நிமித்த பிண்டத்தைப் பிதிர்ப்பிண்டத்துடன் சேர்ப்பதால் இறந்த உயிர் பிரேதத் தன்மை நீங்கிப் பிதிர்த் தன்மையும் சிவலோகப் பேறும் அடையும் என்பது நம்பிக்கை. சபிண்டீகரணத்திற்குப் பின்னர் செய்யப்படும் சிரார்த்த காரியங்களில் நிமித்த பிண்டமின்றி பிதிர்ப்பிண்டம் மூன்று இட்டுச் செய்தல் வேண்டும்.

சபிண்டீகரணமானது பார்வண விதானம், ஏகோதிட்ட விதானம் என இருவகைப்படும். பார்வண விதானம் பிதிர்த்தேவர் மூவரைக் குறித்துச் செய்யப்படும். ஏகோதிட்ட விதானம் குறித்த பிதிர்த்தேவர் ஒருவரைக் குறித்துச் செய்யப்படுகின்றது.

தந்தை, தாய், தந்தையின் சகோதரன், அவன் மனைவி, பேரன், பேத்தி ஆகியோருக்குச் செய்யும் சபிண்டிகரணம் பார்வண விதானமாய் அமையும். மனைவி, கணவன், சகோதரன், மகன், மகள், மாமன், மாமி ஆகியோருக்குச் செய்யப்படும் சபிண்டி கரணம் ஏகோதிட்ட விதானமாய் அமையும். தந்தை, தாயாருக்குச் சபிண்டிகரணம் செய்யும்போது பேரன், பேத்தி உயிருடன் இருந்தால் ஏகோதிட்ட விதானமாகச் செய்தல் வேண்டும்.

வீட்டுக் கிரியையைப் பொதுவாகச் சபிண்டீகரணம் என்று தற்காலத்தில் சொல்லப்படுகின்றது. இது ஒரு வருடமுடிவிலேயே செய்யப்படல் வேண்டும். எனினும் கர்த்தாவிற்கோ, குடும்பத்

தினருக்கோ இடையில் ஏற்படும் வசதியீனங்களைக் கருத்திற் கொண்டு ஆசௌசம் நீங்கிய மறுநாளில் இத்தானம் செய்யப்படுகின்றது.

**இதிலே நான்கு பகுதிகள் உண்டு.**

1. சிவனடியார் பொருட்டு இருவர் - நந்திதேவர், மகாகாளர்
2. பிதிர்த்தேவர் பொருட்டு மூவர் - கந்தர், சண்டர், கணாதீசர்
3. அதிதி அப்பியாதரர் இருவர் -முன் அறியப்படாதவர், அப்போது அங்கு வந்தவர்
4. நிமித்தர் - இறந்தவர் பொருட்டு ஒருவர்

இவ்வாறு எண்மர் அமர்த்தப்படுவர். எண்மர் கிடைக்காத போது அல்லது வசதி இல்லாதபோது ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொருவராக நால்வரையேனும் விசுவதேவருக்கு ஒருவர், பிதிர்த்தேவருக்கு ஒருவராக இருவரையேனும் அமர்த்தலாம். ஒருவரே அமையும்போது புயங்களில் விசுவதேவரையும் தோளுச்சியில் பிதிர்த்தேவர்களையும் பூசிக்கலாம்.

இவர்களைச் சகல உபசாரங்களுடன் வீட்டிற்குள் அழைத்துவந்து தர்ப்பை ஆசனத்தில் விசுவதேவர், அதிதி அப்பியாதரரைக் கிழக்கு முகமாகவும், பிதிர்த்தேவர்களை வடக்கு முகமாகவும் நிமித்தரை மேற்கு முகமாகவும் அமர்த்துதல் வேண்டும். அவர்களின் முன்னால் பாத்திரங்களை வைத்து தேவ பாத்திரத்தில் நெல்லும் பிதிர் பாத்திரத்தில் எள்ளும் இட்டுப் பூசிக்கவும். பூணூலை வலமாக இட்டு விசுவதேவரையும் இடமாக இட்டுப் பிதிர்த்தேவரையும் பூசிக்க வேண்டும். நிமித்தரையும் பின் அதிதி அப்பியாதரரையும் பூசித்து வஸ்திரம், அரிசி, காய்கறி தானஞ்செய்து தட்சணைகள் கொடுத்தல் வேண்டும்.

அவர்கள் முன்னிலையில் சாணத்தால் மெழுகி வாழையிலையில் தெற்கு நுனியாகத் தர்ப்பைகளை வைத்து எள்ளுச் சிதறிக் கிரியை செய்பவர் தெற்கு நோக்கி இடது முழந்தாள் இடது கையை ஊன்றியிருந்து வடக்கிலிருந்து

தெற்காக முதல் வரிசையில் பிதிர் வர்க்கதிற்கு மூன்று பிண்டமும் இரண்டாவது வரிசையில் மாத்ரு வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும் கிழக்கில் மூன்றாவது வரிசையில் நடுவில் இறந்தவர் பொருட்டு ஒரு பிண்டமும் இடுதல் வேண்டும். நிமித்த பிண்டம் சற்று நீண்டதாய் நுனி வளைந்து மற்றப் பிண்டங்களைத் தீண்டும் வகையில் அமைதல் வேண்டும். பின்னர் பிண்டகண்டனம் எனப்படுகின்ற இறந்தவர் பொருட்டு இடப்பட்ட பிண்டத்தை ஏனைய பிண்டங்களுடன் இணைக்கும் சடங்கு இடம்பெறும். இவ்வாறு செய்யப்படுவதால் இறந்தவர் தனது மூதாதையர் களுடன் சேர்ந்துவிட்டதாக நம்பப்படுகிறது.

பிண்டங்களிற்கு மஞ்சள், சந்தனம். பூச் சாத்தி இறந்தவர் ஆணாகில் வேட்டியும் பெண்ணாகில் சேலையும் பிண்டத்திற்குச் சாத்துதல் வேண்டும். பிண்டத்திற்கு மேற்கே அன்னம், கறிவகை. தயிர், பாயாசம், பலகாரம், பழவகை, வெற்றிலை,பாக்கு என்பவற்றைப் படைத்து இளநீரை வெட்டித் திறந்து வைக்கவும். பின்னர் தூபதீபம் காட்டி வழிபாடு செய்தல் வேண்டும். கிரியை செய்தவரும் உறவினர்களும் பூவும் நீருமிட்டு வழிபட்டபின்னர் திருமுறைகள் பாடித் தர்ப்பணஞ் செய்தல் வேண்டும். இச் சந்தர்ப்பத்தில் இறந்தவருக்குச் சரமகவி (கல்வெட்டு) பாடப் பட்டிருப்பின் அதனையும் படித்தல் வேண்டும். முற்காலத்தில் இறந்தவர் ஞாபகார்த்தமாகச் சரமகவி பாடும் முறையிருந்தாலும் தற்காலத்தில் அச்செயற்பாடு நிறுத்தப்பட்டு அவரவர் வசதிக்கேற்பப் பொருட்களை அல்லது மரக்கன்றுகளை வந்திருப்போருக்கு வழங்கும் நடைமுறை பின்பற்றப்படுகின்றது.

பின்னர் நிமித்த பிண்டத்தில் சாத்திய பூவை எடுத்துப் பிதிர்ப்பிண்டத்தில் சேர்ப்பதன் மூலம் இறந்தவர் முன்னோர்களுடன் அதாவது பிதிர்களுடன் இணைந்தார் எனக் கொள்ளப்படும். பின்னர் சகல பிதிர்த்தேவர்களையும் உத்வாசனம் செய்து பிண்டங்களைப் பசுவிற்குக் கொடுத்தல் அல்லது சமுத்திரத்தில் விடுதல் வேண்டும்.

வடக்குத் தெற்காக மூன்று பாத்திரமும் கிழக்கில் ஒரு பாத்திரமும் வைத்து அவற்றுள் அர்க்கியம் (நீர், சந்தனம். பால், எள்ளு, தர்ப்பை நுனியும் இட்டு மூன்று முறை பாத்திரத்துள்ளும் பிதிர்த் தேவரையும் தனிப்பாத்திரத்தில் நிமித்தரையும் பூசித்து நிமித்தருக்குரிய பாத்திரத்தில் உள்ள அர்க்கிய சலத்தை பிதிர்த் தேவருக்குரிய மூன்று பாத்திரத்தில் உள்ள சலத்துடன் சேர்க்கும் நிகழ்வு அர்க்கிய சம்யோசனம் எனப்படும்.

## யாத்ரா தானம்.

இறந்தவருடைய விண்ணுலகப் பயணத்தின்போது ஏற்படும் உணவு, நீர். வெளிச்சம் மற்றும் உடைத் தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு இத்தானம் வழங்கப்படுகின்றது. அரிசி, மரக்கறி என்பவற்றை ஒரு தூய வெள்ளைத் துணியில் பொட்டலமாகக் கட்டி நீர்நிறைந்த செம்புடன் ஒரு விளக்கும் ஓர் அந்தணருக்குத் தானமாக வழங்கப்படும்.

பின்னர் உருத்திரபலியிட்டு பிரபூதபலி எனப்படுகின்ற பேருணவு படைத்து தீபாராதனை காட்டித் தோத்திரம் செய்து வணங்குதல் வேண்டும். பின்னர் சுற்றத்தவர் பூவும் நீருமிட்டு அஞ்சலி செய்தல் வேண்டும். குருவிற்கு தட்சணைகள் கொடுத்து அவரிடம் ஆசி பெறுவதுடன் கிரியைகள் நிறைவு பெறும்.

## ஆப்திகம் அல்லது ஆட்டைத் திவசம்.

இறந்த ஓராண்டு முடிவிலே வருகின்ற இறந்த திதியிலே செய்யப்படும் சிரார்த்தமாதலால் இது ஆண்டுத் திவசம் அல்லது ஆட்டைத் திவசம் என அழைக்கப்படுகின்றது. இச்சிரார்த்தத்துடன் இறந்தவரைக் குறித்துச் செய்யப்படும் அபரக் கிரியைகள் நிறைவுறும். இதன் பின்னரே கர்த்தாவிற்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் பூரணமாக ஆசௌசம் நீங்கப்பெறும். இதன் பின்னர் அவர்கள் ஆலயஞ்செல்லுதல் சுபகாரியங்கள் செய்தல்,

சுபகாரியங்களில் கலந்து கொள்ளல் போன்ற செயற்பாடுகளில் மனப்பூர்வமாக ஈடுபடலாம்.

## வருட சிராத்தம்.

சிரத்தையுடன் செய்யப்படுவது எனப்பொருள் கொள்ளப்படும். இறந்துபோன முன்னோர் ஆத்மாவை கரையேற்றச் செய்யும் சடங்கே இதுவாகும். வருடம் தோறும் இறந்த மாதம், திதியில் தந்தை தாயாரைக் குறித்துச் செய்யப்படுவது சிராத்தமாகும். மகன் தந்தைக்குச் செய்யும் சிராத்தத்தில் தந்தை, பேரன், பூட்டன் ஆகிய மூவருக்கு மூன்று பிண்டமும் தமது வம்சத்தில் உள்ள பிதிர்கள் எல்லோருக்குமாக ஒரு பிண்டமும் இடுதல் வேண்டும். தாயாருக்குச் செய்யும் சிராத்தத்தில் தாய், தகப்பனின் தாய், பேரனுடைய தாய் ஆகிய மூவருக்கு மூன்று பிண்டமும் தமது வம்சத்தில் உள்ள பிதிர்கள் எல்லோருக்குமாக ஒரு பிண்டமும் இடுதல் வேண்டும். இவ்வாறு செய்யப்படும் சிராத்தமானது அன்ன சிராத்தம், ஆம சிராத்தம், இரணிய சிராத்தம், தருப்பணரூப சிராத்தம் என நான்கு வகைப்படும்.

### அன்ன சிராத்தம்.

தம்மரபிலோ அல்லது தம்மிலும் உயர்ந்த மரபிலோ உள்ள சமயதீட்சை பெற்ற ஒருவரை அழைத்து நிமித்த தானத்திலிருத்தி குறித்த தானத்திற்கு உரியவராகப் பூசித்து அமுது படைத்துச் செய்யப்படுவது அன்ன சிராத்தமாகும். இதில் அன்னம், எள், பானீயம்(நீர்), தயிர், பால், தேன், நெய், வாழைப்பழம் ஆகிய பொருட்கள் சேர்த்துப் பிண்டமிடப்படல் வேண்டும்.

### ஆம சிராத்தம்.

உணவிற்குப் பதிலாக அரிசி, காய்கறி வகைகளைப் படைத்துச் செய்யப்படும் சிராத்தம் ஆம சிராத்தம் எனப்படும்.

இதில் அரிசிமா, உழுந்துமா, எள், பால், தயிர், நெய், தேன், வாழைப்பழம் ஆகிய பொருள்கள் சேர்த்து உருட்டிப் பிண்டமிடல் வேண்டும். இவ்வெட்டுப் பொருட்களும் அட்டாங்கம் எனப்படும்
.

**இரணிய சிராத்தம்**

அன்ன சிராத்தம், ஆம சிராத்தம் செய்வதற்கு வசதியில்லாத போதும் தகுதியானவர் கிடைக்காத போதிலும் பணத்தை வைத்துச் செய்யப்படும் சிராத்தம் இரணிய சிராத்தமாகும்.

**தருப்பணரூப சிராத்தம்.**

இது அமாவாசையில் செய்யப்படுவதாகும். அன்ன சிராத்தத்தில் அன்ன பிண்டமும், ஆம சிராத்தத்தில் ஆம பிண்டமும் இடல் வேண்டும். மாதந்தோறும் அமாவாசை வாரநாள்களில் விசேடமாக ஆடி, தை அமாவாசையிலும் இறந்தவரை நினைத்துச் சிராத்தஞ் செய்தால் குடும்பத்திற்குப் பல நன்மைகள் கிடைக்கப்பெறும். அமாவாசையில் சிராத்தம் செய்வது பிரசித்தமானது. இதனைச் செய்வதால் தன் பிதிர்களுக்குப் பரலோகத்தில் திருப்தியும் தனக்கு வம்ச விருத்தியும் செல்வமும் உண்டாகின்றது என மனுதருமம் விளக்குகின்றது.

## நைமித்தியசிராத்தம்.

பிதா , மாதா இறந்த தினமும் திதியும் வருடந்தோறும் வரும்பொழுது விசுவாசத்தோடு விதிப்படி செய்வது நைமித்திய சிராத்தம் எனப்படும். இத்திதியிலேயே சிராத்தம் செய்தல் வேண்டும். திதி தெரியாவிடின் அம்மாத அமாவாசை அல்லது அட்டமியில் செய்யலாம். மாதம் தெரியாவிடின் ஆடி, புரட்டாதி, மார்கழி, மாசி மாதங்களில் அத்திதியில் செய்யலாம். இவை எதுவும் தெரியாதோர் புரட்டாதி மாதத்தில் வருகின்ற மாளய பட்ச காலங்களில் செய்யலாம்.

## தீர்த்தசிராத்தம்.

மாதந்தோறும் அமாவாசையில் பிதா, மதாக்களின் பொருட்டுச் செய்யப்படும் பிதிர்த் தேவர்களின் தாகசாந்திக் கருமமேதீர்த் சிராத்தம் எனப்படும். அமாவாசை, சூரிய கிரகணம், சந்திர கிரகணம், உத்தராயணம், சித்திரை வருடப்பிறப்பு ஆகிய நாள்களில் புண்ணிய தீர்த்தத்தில் நீராடிப் பிதிர்த் தர்ப்பணஞ் செய்து சிவனடியாரோடு உண்ணுதல் வேண்டும். நீராடுபவர்களுடையபாவங்களை நீக்கி அவர்களுக்கு வீடுபேறு கொடுப்பதற்காகவும் புண்ணிய காலங்களில் தென்புலத்தாரைக் குறித்துத் தருப்பணம் முதலியன செய்து அவர்களுடைய பிறவிக் கடனின்றும் கரை சேர்வதற்காகவும் இறைவன் தமது வடிவையே தீர்த்த வடிவமாக்கியுள்ளனர்.

## எள்ளுந் தண்ணீரும் இறைத்தல்.

தருப்பணம் என்பது திருப்திக்காகச் செய்யப்படுவதாகும். தருப்பையைக் குறுக்காகப்பிடித்து அத்தருப்பை மூலத்திலிருந்து எள்ளுக் கரைத்த நீரை கட்டை விரல் மூலம் விழச் செய்யப்படும். இந்நேரம் தலைமுறையான பிதிர்கள் பெயர் சொல்லிச் செய்யப்படும்.தருப்பண முடிவிலே என்குலப் பிதிர்களே பூமியில் விடப்பட்ட இந்த நீரினால் நற்கதியையும் திருப்தியையும் அடையுங்கள் என்று சொல்லித் தருப்பை எள்ளுடன் தீர்த்தத்தில் போடப்படும்.

### அமாவாசை. பௌர்ணமி விரதங்கள்

தந்தையை இழந்தவர்கள் அமாவாசை விரதத்தையும் தாயை இழந்தவர்கள் பௌர்ணமி விரதத்தையும் கடைப்பிடிக்க வேண்டும். ஆட்டைத் திவசம் முடிந்த பின்னர் வருகின்ற ஆடி அமாவாசை தொடக்கம் மாதந்தோறும் வருகின்ற அமாவாசை நாள்களில் தந்தைக்காக விரதமிருத்தல் வேண்டும். அதேபோல ஆட்டைத் திவசம் முடிந்தபின்னர் வருகின்ற சித்திரைப் பௌர்ணமி

முதலாக மாதந்தோறும் வருகின்ற பௌர்ணமி நாள்களில் தாயாருக்காக விரதிமிருத்தல் வேண்டும்.

தத்தம் வேலை காரணமாகவோ அல்லது வேறு ஏதுக்களாலோ மாதந்தோறும் இவ்விரதங்களைக் கடைப்பிடிக்க முடியாதவர்கள் ஆடி அமாவாசை, தை அமாவாசை மற்றும் சித்திரைப் பௌர்ணமி விரதங்களையாவது கடைப்பிடித்தல் நலமாகும்.

## மாளயம் அல்லது மஹாளயம்.

மாளயம் அல்லது மஹாளயம் என்பது ஒரு பொதுச் சிராத்த தினமாகும். புரட்டாதி மாத அபரபக்கப் (பூரணையை அடுத்த பிரதமை முதல் அமாவாசை ஈறாக உள்ள நாள்கள்) பிரதமை முதல் அமாவாசை வரையுமுள்ள காலம் மாளயபட்சம் எனப்படும். பிதிர்களைத் திருப்திப்படுத்தவும் அவர்கள் நற்கதி அடையவும் பிதிர்க்கருமங்கள் செய்தல் இந்துக்கள் ஒவ் வொருவரதும் இன்றியமையாத கடமையாகும். இல்லற தர்மத்தில் உள்ளவர்களுக்கான ஐவகைக் கடமைகளில் பிதிர்க்கடனும் ஒன்றாகும்.

இதனையே வள்ளுவர்

**தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு**
**ஐம்புலத்தா றோம்பல் தலை.**

என்று கூறியுள்ளார்.

பிதிர்கள், தெய்வம், விருந்தினர், சுற்றத்தவர், தான் என ஐந்துபேர்களையும் காப்பாற்றுதல் இல்லறத்தானுக்கு உரிய கடமையாகும். சூரியன் தெற்கு நோக்கிச் சஞ்சரிக்கும் தெட்சணாயன காலத்தின் நடுப்பகுதி புரட்டாதி மாதமாகும். இக்காலம் சூரியன் பூமிக்கு நேரே நிற்கும். சந்திரனும் தென்பாகத்திற் பொருந்தி இருக்கும் இக்காலம் பிதிர்க் கருமங்களுக்கு உகந்த காலமாகக் கொள்ளப்படுகின்றது.

ஒருவர் இறந்த திதியில் அவருக்குச் சிராத்தம்- திவசம் செய்தல் வேண்டும். இறந்த திதி தெரியாத சந்தர்ப்பத்தில் அல்லது சிராத்தம் செய்வது ஏதோ காரணத்தால் தடைபட்டுப் போனால் அம்மாதத்தில் வருகின்ற அமாவாசை அல்லது அட்டமியில் செய்தல் வேண்டும். அல்லது இந்த மாளயபட்ச காலத்தில் செய்து கொள்ளல் வேண்டும். தெரிந்தோ தெரியாமலோ ஒரு சிராத்தம் செய்ய முடியவில்லையாயின் இந்த மாளய பட்ச காலத்தில் செய்து கொள்ளல் வேண்டும்.

இந்த பட்சகாலம் முழுவதும் பிதிர்க்கருமம் செய்தால் வருடம் முழுவதும் செய்தபலன் கிடைக்கும் என்பது நம்பிக்கை. பிரதமையில் தனசம்பத்தும், துவிதியையில் பிரஜாபலமும், திருதியையில் வளர்ச்சி லாபமும், சதுர்த்தியில் சத்துருநாசமும், பஞ்சமியில் சம்பத்தும், சஷ்டியில் புகழும், சப்தமியில் கணாதிபத்தியமும், அட்டமியில் சிறந்த புத்தியும், நவமியில் ஸ்தீரிசம்பத்தும், தசமியில் இஷ்டசித்தியும், ஏகாதசியில் வேதசித்தியும், துவாதசியில் பிரஜாவிருத்தியும், திரயோதசியில் பசுவிருத்தியும், சதுர்த்தசியில் புஷ்டியும், அமாவாசையில் தீர்க்க ஆயுளும் கிடைக்கும். யந்திரங்களால் இறப்பவர்களுக்கு சதுர்த்தசியிற் பிதிர்க்கருமம் செய்வது சாலச் சிறந்ததாகும்.

பிதிர்க்கருமங்கள் செய்வதற்கு அயோத்தி, மதுரை, மாயாபுரி, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்பன சிறந்த புண்ணிய தலங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. காயாவில் செய்யப்படும் சிராத்தம் மிகவும் விசேடமானதாகும். திரயோதசியிற் செய்யப்படும் சிராத்தம் காயா சிராத்தத்தை ஒத்ததாகும்.

பிதிர்க்கருமத்தின்போது வழங்கப்படும் தர்ப்பணம், தானம் முதலியவற்றின் பலன்களை அதனைப் பெற்றுக்கொள்பவர்கள் உரியவர்களின் இருப்பிடம் அறிந்து அவர்களிடம் சேர்ப்பிப்பர் என்பது நம்பிக்கை. சிராத்த காலத்தில் விரதமிருந்து பிதிர் தர்ப்பணம், தான தருமம், சாதுக்கள் அடியவர்களுக்கு அமுதளித்தல் செய்வதால் நலமுண்டாகும்.

## தனிஷ்டா பஞ்சக தோஷம்.

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களில் இறப்பு நிகழ்ந்தால் அது தனிஷ்டா பஞ்சக தோஷமெனப்படும். இதையே ஊரவர்கள் பஞ்சமி தோஷம் என்பர். பஞ்சமித்திதியில் எவ்வித தோஷமுமில்லை என்பதை நினைவிற் கொள்க. இப்பஞ்சகதோஷ காலத்தை இந்தியாவில் அடைப்பு நாள்கள் எனவும் அழைப்பர்.

அவிட்டத்திற்கு ஆறு மாதமும் , சதயத்திற்கு மூன்று மாதமும், பூரட்டாதிக்கு ஒன்றரை மாதமும், உத்தரட்டாதிக்கு ஒரு மாதமும், ரேவதிக்கு பதினைந்து நாள்களும் தனிஷ்டா பஞ்சகக் குற்றமாகும். இந்த நட்சத்திரங்களில் ஒருவர் இறந்தால் பூதவுடலுடன் தென்னம்பிள்ளை, கமுகம்பிள்ளை, வாழைக்குட்டி, ஏதாவது ஒன்றைக் கொண்டு சென்று தகனஞ் செய்தல் வேண்டும். பின்னர் வீட்டில் பஞ்சக தோஷ சாந்தி செய்யத் தோஷம் நீங்கும். இத்தோஷ நிவர்த்தி சாந்தியானது சுப நட்சத்திரத்தில் சுப வாரத்தில் செய்யப்படும். அல்லது துடக்குக் கழித்தபின்னர் வீட்டுக்கிருத்திய காலங்களில் இரவு சாந்தி செய்யலாம்..

## சிராத்தத்திற்கு ஆகாத திரவியங்களும், பூக்களும்.

கடலை, துவரை, வெண்கடுகு, பெரும்பயற்றங்காய், பீர்க்கங்காய், அத்திக்காய், சுரைக்காய், வாழைப்பூ, முள்ளங்கி, முருங்கைக்காய், வெள்ளைப்பூடு, எருமைப்பால், எருமைத்தயிர், எருமைநெய், ஆட்டுப்பால், ஆட்டுத்தயிர், ஆட்டுநெய் ஆகிய திரவியங்களும் மகிழம்பூ, தாழம்பூ, அலரிப்பூ, சிறுசண்பகப்பூ ஆகிய பூக்களும் சிராத்த கருமங்களுக்கு ஆகாதனவாகும்.

## சிராத்தத்திற்கு உகந்த பூக்கள், பத்திரங்கள்

துளசி, வில்வம், தாமரை, சண்பகம், அறுகு,புன்னை, நந்தியா வர்த்தை, எட்பூ, மருக்கொழுந்து, வெட்டி வேர்.

## அதிதி பிதிர் பூசை.

இது வேதத்தில் மிகச்சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. இந்துக்களுக்கு இன்றியமையாத சிறந்த தானமாக கருதப் படுகின்றது. விருந்தோம்பல் என்பது இந்துக்களால் தொன்று தொட்டுக் கடைப்பிடிக்கப்பட்டு வந்ததொன்று. தற்காலத்தில் அதனைச் செய்வது முடியாத காரணத்தால் சோறு சமைத்தவுடன் ஓர்பிடியை எடுத்து காகத்திற்கு வைத்தல் வேண்டும். இதுவே அதிதி பூசையும் பிதிர் பூசையுமாகும். இன்றும் விரத காலங் களிலும் சிராத்த காலங்களிலும் காகத்திற்குச் சோறுவைத்தலைக் காணலாம்.

மேலும் சனிப் பிரீதியை முன்னிட்டு சனிக்கிழமைகளில் சோறுபோடும் வழக்கமுமுண்டு. தினமும் இவ்வாறு காகத்திற்கு அன்னமிட்டு வந்தால் அதிதி பூசை. பிதிர் பூசை, சனிப்பரீதி ஆகியன செய்தபலன் கிடைக்கும். கிராமப்புறங்களில் இவ்வாறு அனுட்டிப்பது சாத்தியமானாலும் நகர்ப்புறங்களிலும் காகத்தைக் காணமுடியாத நிலையில் உள்ள புலம்பெயர் தேசத்தவரும் சமைப்பதற்கு முன்னர் ஒருபிடி அரிசியை ஒரு பாத்திரத்தில் எடுத்துவைத்து மாதமுடிவில் அதனை அருகில் உள்ள கோயிலில் கொடுத்து கடவுளுக்கு நிவேதிக்கலாம். அல்லது அன்னதானம் செய்விக்கலாம்.

## சிராத்த திதி.

ஒருவருக்குச் சிராத்தம் செய்யும்போது அவர் இறந்த தமிழ் மாதம், பட்சம், திதி எது என அறிந்து அத்திதியில் செய்தல் வேண்டும்.

உதாரணமாக புரட்டாதி மாத வளர்பிறைத் தசமித் திதியில் ஒருவர் இறந்தால் அது நவராத்திரி இறுதிநாள் அதாவது விஜய தசமியன்று எனக்கொள்ளல் கூடாது. ஏனெனில் நவராத்திரி இறுதிநாள் சில காலங்களில் ஐப்பசியில் வருவதும் உண்டு.

இப்படி வரும்போது சிராத்தத்திற்கு முதல் மாதம் சிராத்த திதியைப் பார்த்து நிர்ணயம் செய்துகொள்ளல் வேண்டும். சில வேளைகளில் உரிய திதி அம்மாதத்தில் அமையாது முதல் மாதத்திலும் அமையலாம். திதியானது பகல் 12.00 மணிக்கும் 3.00மணி 36 நிமிடத்திற்கும் இடையில் வியாபித்திருந்தால் அன்றே அத்திதியில் காலையில் அத்திதி இல்லாவிட்டாலும் செய்யப்படல் வேண்டும். இந்நேரத்தை அபரான்ன காலம் என்பர். குறித்த திதியானது மாலை 3.30 மணியின் பின்னர் ஆரம்பமாகி அடுத்தநாள் மதியம்வரை இருக்குமானால் மறுநாள் செய்யப்படல் வேண்டும். சிலர் தம்மூர் ஆலயத் திருவிழாக்களை மையப்படுத்தி தேர்த்திருவிழா அன்று அல்லது தீர்த்தத்தில் அன்று எனவும் கொள்வர். இதுவும் தவறாகும்.

அமாவாசைக்கும் பௌர்ணமிக்கும் இடையிலுள்ள காலம் பூர்வபட்சம் (வளர்பிறை) என்றும் பௌர்ணமிக்கும் அமா வாசைக்கும் இடையிலுள்ள காலம் அபரபட்சம் (தேய்பிறை) என்றும் அழைக்கப்படும்.

குறித்த ஒரு திதியானது தமிழ் மாதத்தின் முதலிலும் இறுதியிலும் இரு தடவைகள் வருமானால் பிந்திய திதியில் செய்யவேண்டும். பிந்திய திதியில் மாதப்பிறப்பு, கிரகணதோஷம் இருக்குமானால் முந்திய திதியில் செய்தல் வேண்டும். இரண்டு திதியும் மாதப்பிறப்பாக இருந்தால் பிந்திய திதியில் செய்யலாம்.

## இறப்புச் சடங்கில் ஒப்பாரி

இறந்த ஒருவரைக் குறித்து பாடப்படும் பாடல்களே ஒப்பாரி என அழைக்கப்படுகின்றது. இறந்தவரின் இழப்பை எண்ணி இறந்தவர்களையும் தம்மையும் ஒப்பிட்டு அவர் செய்த நல்ல விடயங்களைக் குறிப்பிட்டுப் பாடப்படும். ஒருவருடைய வாழ்வில் முன்னுரை தாலாட்டு என்றால் முடிவுரை ஒப்பாரி ஆகும்.

ஒப்பு + ஆரி ஒப்பாரி அதாவது ஒப்புச்சொல்லி அழுதல் எனப் பொருள்படும். அத்தோடு பெண்களால் பாடப்படுவது என்றும் இறந்தவருக்கும் அடுத்தவருக்கும் ஒப்புச் சொல்லிப் பாடப்படும் இவ்வொப்பாரிக்குத் தமிழில் பிலாக்கணம், பிணக்கானம், கையறுநிலை, புலம்பல், இரங்கற்பா, சாவுப்பாட்டு, இழவுப்பாட்டு, அழுகைப்பாட்டு எனப் பலவகையான பெயர்கள் உண்டு..

பாதுகாப்பை இழந்தாலும் பாதுகாக்கப்பட வேண்டியதை இழந்தாலும் பெண்களின் ஒப்பாரிகளில் சோகம் கொப்புழிக்கும். கணவனுக்காகவும் பெற்றோர்களிற்காகவும் உடன் பிறந்தவர்கள், பிள்ளைகள், மற்றும் உறவினர்களிற்காகவும் இறந்த பொழுதில் பெண்கள் ஒப்பாரி பாடுவார்கள். ''தலைச்சன் பிள்ளை பெத்தவளுக்குத் தாலாட்டும் புருசனை இழந்தவளுக்கு ஒப்பாரியும் தானாகவே வரும்'' என்ற பழமொழி வழக்கில் உள்ளது. இறந்தவரின் பெருமையும் அவரது குணநலன்களும் பிறரால் போற்றப்பட்ட முறையும் இவ்வொப்பாரிப் பாடல்களில் காணலாம். இறந்தவரை மற்றவர்கள் நேசித்த முறையும் ஈமச்சடங்குகள் பற்றிய விபரங்களும் விதியின் வலிமையும் இத்தகைய ஒப்பாரிப் பாடல்களில் காணப்படும்.

ஒருவருடைய மனக்குறையை அல்லது கவலையை மற்றவரிடம் சொல்லும்போது அவர்களது மனப்பாரம் குறையும் என்பார்கள். அந்தவகையில் அமைந்ததே இப்பாடல்கள் ஆகும். ஒப்பாரி பாடும் பெண்கள் தத்தம் குடும்பங்களில் இறந்தவர்களை நினைத்தும் ஒப்பாரி பாடுவார்கள். இவ்வாறான ஒப்பாரிகளால் ஆத்மாக்கள் சாந்தியடைவதாகவும் அவை மறு உலகம் செல்வதாகவும் நம்பப்படுகின்றது.

எனினும் தற்காலத்தில் இவ்வாறு ஒப்புச்சொல்லி அழுகின்ற பழக்கம் குறைவடைந்து வருகின்றது. இனிவருங் காலங்களில் தேவாரம் பாடுவதற்கு ஆள்களை சம்பளத்திற்கு அமர்த்துவது போல இதற்கும் அமர்த்த வேண்டிய நிலை ஏற்படலாம். கூலிக்கு மாரடித்தல் என்னும் சொற்றொடர் இதனையே விளக்குகின்றது.

## விதவையர் நிலை.

கணவன் இறந்து விட்டால் மனைவிக்கு சமுதாயத்தில் பலவிதமான தொல்லைகள், கட்டுப்பாடுகள் ஏற்படுகின்றன. கணவனைத் தின்றவள், கணவனைக் கொன்றவள், சண்டாளி, அறுதலி, அமங்கலி, விதவை எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றாள். பண்டைய காலத்தில் கணவன் இறந்துவிட்டால் மனைவி உடன் கட்டை ஏறும் வழக்கம் இருந்தது. ஆயினும் தற்காலத்தில் இந்நடைமுறை இல்லை.

அத்துடன் தலை மொட்டை அடிக்கப்பட்டு வெள்ளைச் சேலை அணிவிக்கப்பட்டு மங்கல ஆபரணங்கள் கழற்றப்பட்டு பூவும் பொட்டும் அழிக்கப்பட்டு வெறுமை ஆக்கப்படுகின்றாள். மங்கல நிகழ்வுகளில் முன்னிலையில் கலந்து கொள்ளவும் அனுமதிக்கப்படுவதில்லை. விதவை ஒருவர் முன்வந்தால் அது அபசகுனம் எனக்கருதப்பட்டது. இவ்வாறு மங்கலத் தோற்றம் அகற்றப்படாவிட்டால் அவள்மீது பிறர் காமுறும் நிலை உருவாகும் என்பதால் இவ்வாறு செய்யப்படுவதாகக் கூறப்படுகின்றது.

கணவன் இறந்ததும் மனைவி மொட்டை அடித்தல், வெள்ளைச்சேலை உடுத்தல். குங்குமம், மலர்சூடுவதைத் தவிர்த்தல், ஆபரணங்களை ஒதுக்குதல், சமயச் சடங்குகளின் போது மறைந்துநிற்றல், ஆகிய வழக்கங்கள் இன்றும் ஆங்காங்கே நடைபெற்றாலும் பெருமளவில் குறைந்தள்ளது என்றே கூறலாம்.

## சிலபண்பாட்டு அசைவுகள்.

1. கணவன் இறக்கும் வேளையில் மனைவி கர்ப்பம் தரித்திருந்தால் அச்செய்தி மரணச் சடங்கில் கலந்து கொள்பவர்களுக்கு பூடகமாகத் தெரிவிக்கும் சடங்கு இந்தியாவின் சில பகுதிகளில் தற்போதும் நடைமுறையில் உள்ளது. அதாவது ஒரு வயதான பெண் சபை நடுவில் ஒரு நீர்நிறைந்த செம்பினை வைத்து கையில் இருக்கும் மலர்களினை அச்செம்பினுள் ஒவ்வொன்றாக இடுவார். அவர் எத்தனை பூக்களை இடுகின்றாரோ

அத்தனை மாதக் கர்ப்பம் என்பது சொல்லாமல் சொல்லப்படும். இதன்மூலம் பின்னர் கிடைக்கப்பெறும் குழந்தைக்கு இறந்தவர்தான் தந்தை என்பது அறிவுறுத்தப்படுகின்றது.

2. முற்காலத்தில் மக்களின் தேவைகளின் பொருட்டு மக்கள் பிரிவுகள் இருந்தன. இவர்கள் குடிமக்கள் என அழைக்கப்பட்டனர். முடிவெட்டுதல், துணிதுவைத்தல், மேளம் அடித்தல் எனப்பல வகைப்பட்ட கடமைகளுக்கும் பிரிவுகள் இருந்தன. ஒவ்வொரு சடங்கிலும் இவர்களுக்கெனத் தனித்தனியான வேலைகள் உள்ளன. ஒருவர் இறந்து விட்டால் அவ்வீட்டில் பந்தல் போடுதல். தோரணம் கட்டுதல், நெருப்பு சட்டி (கொள்ளிச் சட்டி) தயார்செய்தல், நெற்பொரி தயாரித்தல், விறகு தறித்தல், மயானத்தில் தகன ஏற்பாடுகளைக் கவனித்தல் போன்ற கடமைகளை இவர்கள் செய்வார்கள். இவர்களுக்கான கூலிகள் வழங்கப்படும்.

ஆயினும் தற்காலத்தில் இவ்வழக்கம் அருகி வருகின்றது. இறுதிக்கிரியைக்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்கென பல நிறுவனங்கள் வந்தவிட்டன. அவர்களிற்குத் தகவல் தெரிவித்து விட்டால் சகல கடமைகளையும் அவர்களே செய்து முடித்து விடுவர். சில நகர்ப்புறங்களிலும் வளர்ந்த நாடுகளிலும் மின்தகன வசதிகள் உள்ளன. இதனால் இவ்வழக்கங்கள் அருகிவருகின்றன.

3. வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவோரைப் பார்வையிடச் சென்று திரும்பினால் நீராடிவிட்டே வீட்டிற்குள் செல்வது வழக்கமாக இருந்தது. ஆனால் இன்று அதனை யாரும் பின்பற்றுவதாக இல்லை.

4. அதேபோல பஸ்வண்டி, தொடர்வண்டி போன்றவற்றில் பிரயாணஞ் செய்து வருபவர்களும் நீராடிவிட்டே வீட்டிற்குள் செல்லும் முறையும் பலரும் அறியாததாக அருகிவருகின்றது.

## முடிவுரை.

உலகினில் பிறப்பெடுக்கும் ஒவ்வோர் உயிரும் இறப்பது நியதியாகும். உரிய நேரத்தில் ஒருவருக்கு இறப்பு வரும் என்பதையே தலைவிதி எனக் கூறப்படுகின்றது. ஒருவர் பிறக்கும் பொழுதே அவருடைய இறப்பு எந்தத் திகதியில் எந்த நேரத்தில் எந்த இடத்தில் எவ்வாறு நிகழும் என்பது எழுதப்பட்டுவிடும் என்பது இந்துக்களின் நம்பிக்கையாகும். ஒரு உடலிலிருந்து பிரிந்து சென்ற உயிர் மீண்டும் மற்றோர் உடலைச் சென்றடை கின்றது என்ற நம்பிக்கையும் ஈற்றில் அந்த ஆத்மாவானது வேறோர் உலகத்திற்குச் சென்று வாழும் என்ற நம்பிக்கையும் எம்மத்தியில் உண்டு. இதனையே மாணிக்கவாசகர் புல்லாகிப் பூண்டாகி............................... எல்லாப் பிறப்பும் பிறந்திழைத்தேன் எம்பெருமான் என்று குறிப்பிடுகின்றார் போலும்.

இறந்தவர்கள் நற்கதியை அடைய வேண்டும் என்பதற்காகவே ஒவ்வொரு சடங்கும் வகுக்கப்பட்டுச் செய்யப்படுகின்றது. இயன்றவரையில் இறப்புச் சடங்குகள் - அபரக்கிரியைகள் பற்றி நான் அறிந்தவற்றையும் நூல்கள், இணையத்திலிருந்து பெற்ற தகவல்களையும் அறிஞர்களிடம் கேட்டறிந்த விடயங்களையும் தொகுத்து இந்நூலை ஆக்கியுள்ளேன். இந்நூலில் உள்ள தகவல்களில் ஏதாவது குறைபாடுகள், மாறுபாடுகள் காணப்பட்டால் அவற்றை எனக்கு உரிய ஆதாரத்துடன் தெரிவித்தால் மறுபதிப்புகளில் திருத்தியமைத்து வெளியிடமுடியும் என நம்புகின்றேன்.

நன்றி.

## பின்னிணைப்பு - I

## இறுதிக் கிரியை செய்தவர் /கொள்ளி வைத்தவர் செய்யக் கூடியவையும் செய்யக் கூடாதவையும்

தனது தாய் அல்லது தந்தை அல்லது பிறிதொருவருக்கு இறுதிக்கடன் செய்த ஒருவர் செய்யக் கூடியவையும் செய்யக் கூடாதவையும் பற்றியும் இடத்துக்கு இடம் கிராமத்திற்குக் கிராமம் வேறுபட்ட நடைமுறைகளே பின்பற்றப்படுகின்றன.

### செய்யக் கூடியவை.

1. விபூதி தரித்தல்.
2. துடக்குக் கழிவின் பின்னர் சமய வழிபாடுகள், விரத அனுட்டானங்கள் செய்யலாம்
3. வீட்டில் விளக்கேற்றி வழிபடலாம்.

### செய்யக் கூடாதவை.

1. ஓராண்டு காலம் ஆலயத்திற்குச் சென்று ஆலயப் பொருள்களைத் தீண்டுதல், சங்கற்பம் செய்துகொள்ள வேண்டிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளுதல்

2. ஓராண்டு காலம் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுதல்

3. ஓராண்டு காலம் பிறிதொரு பிதிர்க்காரியங்களில் உணவுண்ணல். (இது சில இடங்களில் 31 நாள்கள் எனக் கடைப்பிடிக்கிறார்கள்)

5. கன்னிகாதானம், கும்பாபிடேகம், கிருகப்பிரவேசம் போன்ற நிகழ்வுகளில் சங்கற்பம் செய்து கலந்துகொள்ளுதல்.

## சிராத்த காலங்களில் செய்யத்தக்கவை.

அன்னதானம் வழங்குதல்,புத்தாடை பிறருக்கு வழங்குதல், ஆலயங்களில் அபிடேகம், பூசை செய்வித்தல், திருவிளக்கு ஏற்றுதல் என்பன செய்யலாம்.

## சிராத்த காலங்களில் செய்யத்தகாதவை.

தயிர் கடைதல், நெல் குத்துதல், நெய் முதலியன கொடுத்தல், வாங்குதல், கண்ணீர் விடுதல் , கோபித்தல் , பொய் சொல்லுதல், சிந்திய அன்னத்தை மிதித்தல் என்பன செய்யக் கூடாது.

## ஊன மாசிகங்கள் செய்யக் கூடாத நாள்கள்

1. அத்த நட்சத்திரம் உள்ள நாள்
2. செவ்வாய், வெள்ளி,சனிக்கிழமைகள்
3. பிரதமை,சதுர்த்தி,சஷ்டி,நவமி,ஏகாதசித் திதியுள்ள நாள்கள்

## பின்னிணைப்பு - II
## பொதுவான சந்தேகங்கள்

***1. விரத காலங்களிலும் சிரார்த்த காலங்களிலும் காக்கைக்கு அன்னமிடுவதன் பொருள் என்ன?***

பறவைகளில் காக்கையானது கரைந்துண்ணும் தன்மையுடையது. காக்கைக்கு உணவு படைக்கும்பொழுது தான்மட்டும் உண்ணாமல் மற்ற காக்கைகளையும் கரைந்தழைத்துப் பகிர்ந்துண்ணுகிறது. காக்கை உருவத்தில் நமது முன்னோர்கள் வருவதான ஒரு நம்பிக்கை எம்மத்தியில் உண்டு. இதனாலேயே காக்கைக்கு உணவளிக்கப்படுகிறது.

***2. மறைந்து போனவர்கள் மீண்டும் வேறு உலகில் பிறந்து விடுவார்கள் என்றால் ஏன் பிதிர்க்கடன் செய்தல் வேண்டும்?***

வாழ்ந்த மனிதர்கள் தம் ஆயுள் நிறைவடைந்ததும் இறந்து மீண்டும் உலகில் பிறப்பெடுத்தாலும் நம்மை வளர்த்து ஆளாக்கிய அவர்களை நினைவு கொள்வதற்காகவும் அவர்களிற்கு நன்றி செலுத்துவதற்காகவும் இக்கடன்களைச் செய்தல் வேண்டும். அவர்கள் எப்பிறவி எடுத்தாலும் நாம் செய்யும் கடன்களின் பலன்கள் அவர்களைச் சென்றடையும் என்பதும் எமது நம்பிக்கையாகும். இறுதிக் கடன் செய்வது புத்திரர்களின் இன்றியமையாத கடமைகளாகும். இக்கடமைகளைச் செய்தால் பூரண சம்பத்துடன் அவர்கள் வாழ்வார்கள்.

***3. ஒருவரின் மரணத்தின் பின்னர் என்ன நிகழும்?***

இந்தப் பூமியில் பிறந்து வாழ்ந்த காலத்தில் ஒருவன் செய்த பாவ புண்ணியங்களிற்கு ஏற்ப மரணத்தின் பின்னர் அவனுக்கு பலன்கள் கிடைக்கும். அதாவது நரகலோகமோ சொர்க்கலோகமோ என்பதை அவனது பாப புண்ணியங்களே தீர்மானிக்கும்.

***4. திவசம் அல்லது திதி கொடுக்க முடியாதவர்கள் என்ன செய்யலாம்?***

ஆலயம் சென்று இறந்தவர் பெயரில் மோட்ச அர்ச்சனை செய்து பசுமாட்டிற்கு ஆகாரம் கொடுக்கலாம். இயன்ற வரை வெளிநபர் அல்லது அறியாத ஒருவருக்கு ஆகாரம் கொடுப்பது சிறப்பாகும்.

***5. இறந்தவர்களது உருவப்படங்களை தெய்வப் படங்களுடன் சேர்த்து மாட்டலாமா?***

இல்லை. சுவாமி அறையில் மாட்டாமல் பிறிதொரு அறையில் அல்லது முன்கூடத்தில் தெற்குப் புறச்சுவரில் வடக்கு நோக்கியதாக மாட்டலாம்.

***6. இறந்தவர்களின் உருவப் படங்களிற்கு சுவாமிப் படங்களிற்கு செய்வதுபோல தினமும் விளக்கேற்றிப் பூவைத்து வணங்கலாமா?.***

இல்லை. அவர்கள் பிதிர்லோகத்தில் இருப்பதாலும் தெய்வத்தன்மைக்கும் மனிதத்தன்மைக்கும் இடைப்பட்ட நிலையில் இருப்பதாலும் இவ்வாறு வணங்கக்கூடாது. அமாவாசை, பௌர்ணமி, மஹாளயம், அவர்கள் இறந்ததிதி ஆகிய நாள்களில் மட்டுமே அவர்களுக்கு பூலோகம் வருவதற்கான அனுமதி கிடைக்கும் என்பதாலும் அந்நாள்களில் மட்டும் வணங்கலாம்.

***7. மரணித்த தினம் எவ்வாறு கணித்தல் வேண்டும்.***

ஒருவர் இரவு பன்னிரண்டு மணியின் பின்னர் இறந்திருந்தால் அது அடுத்துவரும் நாளின் சூரியோதயத்தின் முன்பாக இருந்தால் முந்திய நாள் இறந்ததாகவே கொள்ள வேண்டும். ஆங்கிலேய முறைப்படி இரவு பன்னிரண்டு மணியின் பின் என்பதால் மறுநாள் இறந்ததாகக் கொள்ளக்கூடாது. தமிழர் கணிப்பின்படி ஒருநாள் என்பது அன்றைய நாள் சூரியோதயம் முதல் மறுநாள் காலை சூரியோதயம் வரை என்பதை நினைவிற் கொள்க.

***8. வாய்க்கரிசி போடப்படுவதன் நோக்கம் என்ன?***

இவ்வளவு காலமும் உயிரோடிருந்தவருக்கு உணவு கொடுத்தவர்கள் இனிவருங்காலங்களில் அவ்வாறு கொடுக்க முடியாது என்பதால் இறுதியாக அவரது வாயில் அரிசியிடும் வழக்கம் ஏற்பட்டிருக்கலாம்.

***9. சுமங்கலிப் பெண்கள் அரப்பெண்ணெய் வைத்தல், வாய்க்கரிசி போடுதல் ஆகிய கடமைகள் செய்யலாமா?***

அவர்கள் திருமணஞ் செய்து பிறகுடும்ப அங்கத்தவராக இருப்பதாலும் கணவன் உயிரோடு இருப்பதாலும் அவ்வாறு செய்வது கூடாது. ஆயினும் தன்னுடைய தாய் அல்லது தந்தை மற்றும் மிகநெருங்கிய உறவினர்களாயின் தன்னுடைய கணவனின் அனுமதியைப் பெற்று இவற்றைச் செய்யலாம். ஏனையவர்களுக்குச் செய்யக்கூடாது. அதன்பின்னரான காலப்பகுதியில் உரிய துடக்கினையும் காத்தல் வேண்டும்.

***10. ஒருவீட்டில் இறப்பு நிகழ்ந்தால் விட்டிலுள்ள சுவாமிப்படங்கள் உள்ளடங்கலாக படங்கள் அனைத்தையும் மூடிவிடுதல் அல்லது திருப்பிவிடுதல் அவசியமா?***

ஆம், வீட்டிலுள்ளோரினதும் பங்குபற்றுவோர்களினதும் திரிகரண சுத்தியின் (மனம். வாக்கு, காயம்) பொருட்டுப் படங்கள் மறைக்கப்படல் வேண்டும். அதாவது இறந்தவர் பற்றிய சிந்தனை தவிர வேறு சிந்தனைகள் ஏற்படக்கூடாது என்பதற்காக இவ்வாறு செய்யப்படுகிறது.

***11. கிரியை செய்த, கொள்ளிவைத்த ஒருவருக்கு மட்டும் ஓராண்டுக்கான கட்டுப்பாடுகள் உண்டா அல்லது அவரது மனைவி பிள்ளைகளுக்கும் பொருந்துமா?***

குறித்த கட்டுப்பாடுகள் அவரது குடும்பத்தவர்கள் அனைவருக்கும் பொருந்தும்.

***12. இறந்தவர்களுக்கு பூப்போட்டு வணங்குதலும் மாலை அணிவித்தலும் நடைபெறுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் ஒருபெண் ஆனுக்கு அல்லது ஓர் ஆண் ஒரு பெண்ணுக்கு மாலை அணிவிக்கலாமா. எமது பண்பாட்டில் கணவன் அல்லது மனைவிக்கே ஒருவரால் மாலை அணிவிக்க முடியும்.***

இறந்த ஒருவர் மாலை குளிப்பாட்டப் பட்டதன் பின்னர் சிவன் அல்லது அம்மனாகக் கருதப்படுவதால் மாலை அணிவிப்பதில் தவறில்லை. தாராளமாக அணிவிக்கலாம்.

***13. கணவனை இழந்த பெண்கள் மலர்மாலை அணிவதில்லை. அப்படி இருக்கும் பொழுது கணவனை இழந்த பெண் ஒருவர் இறக்கும் பொழுது மாலை அணிவிக்கலாமா?***

இதற்கும் முன்சொன்ன பதிலே பொருந்தும் அதாவது இறந்த ஒருவர் மாலை குளிப்பாட்டப்பட்டதன் பின்னர் சிவன் அல்லது அம்மனாகக் கருதப்படுவதால் மாலை அணிவிப்பதில் தவறில்லை. தாராளமாக அணிவிக்கலாம்.

பின்னிணைப்பு - III

## ஆசௌசம் அல்லது துடக்கு.

ஆசௌசம் என்றால் தூய்மையின்மை என்று பொருள்படும். சௌசம் என்றால் சுத்தி. ஆசௌசம் என்றால் சுத்தியின்மை அதாவது தூய்மையின்மை. (சௌசம், ஆசௌசம்- வடமொழிச் சொற்கள், சுத்தி, சுத்தியின்மை தமிழ் மொழிச்சொற்கள்)

எமது சமய மரபுகளின்படி எம்மவர் இல்லங்களில் அல்லது உறவினர் இல்லங்களில் இடம்பெறுகின்ற பிறப்பு இறப்பு சம்பவங்களின் போது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இத்துடக்கு கடைப்பிடிக்கப்படுகின்றது. துடக்குக் காலத்தில் ஆலயம் செல்வதோ, திருமணம் உள்ளிட்ட சுப நிகழ்ச்சிகள் செய்வதோ அவ்வாறான நிகழ்வுகளில் முன்னிற்பதோ பொது நிகழ்வுகளிற்குச் சென்று மகிழ்வுறுவதோ தவிர்க்கப்படுகின்றது. அத்துடன் துடக்கு உள்ளவர்கள் வீட்டில் உணவுண்பதும் தவிர்க்கப்படுகின்றது. அவ்வாறு உண்பதனால் உண்டவர்களுக்கும் துடக்கு உண்டாகும்.

இத்துடக்கானது அவ்வீட்டினை மட்டும் சாராமல் அவர்களின் ஆண்வழியில் உள்ள சகோதரர்கள், பெரியதந்தை, சிறியதந்தை, பேரன், பூட்டன் என்று எல்லோரையும் அவர்களின் ஆண்பிள்ளைகளையும் சாரும் என்று ஆசௌச தீபிகை என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆண்வழியில் ஏழு தலைமுறையினருக்கு இத்துடக்கு உரித்தென்று முற்காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும் தற்காலத்தில் இது ஐந்து தலைமுறை, மூன்று தலைமுறை எனச் சுருங்கி வந்து தற்போது அவ்வீட்டினருடன் மட்டுப்படுத்தப்படுகின்றது. ஒருவீட்டில் திருமணமாகாத பெண்பிள்ளைகள் இருப்பின் அவர்களிற்கும் இத்துடக்கு உரித்தானதாகும்.

## ஏழு தலைமுறைகள்.

1. மகன், மகள்
2. தாய், தந்தை
3. பாட்டன், பாட்டி
4. பூட்டன், பூட்டி
5. ஓட்டன், ஓட்டி
6. சேட்டன், சேட்டி
7. பரன், பரை

முற்காலத்தில் உறவினர்கள் அனைவரும் ஒரு சுற்றாடலில் வாழ்ந்ததாலும் ஒருவருக்கொருவர் உள்ளன்போடு பழகிய காரணத்தாலும் அதீத பாசப்பிணைப்பினாலும் இவ்வேழு தலைமுறை என்பது சாத்தியமாயிற்று எனலாம். எனினும் தற்காலத்தில் நெருங்கிய உறவினர்கள் தூர இடங்களில் அல்லது வெளிநாட்டில் வாழ்வதால் உறவின் நெருக்கம் குறைந்து விடுகின்றது. அவர்களின் இரண்டாம், மூன்றாம் சந்ததியினர் ஒருவரையொருவர் அறியாமலிருப்பதும் கண்கூடு. இதனால் தற்போது துடக்கு அந்தந்த வீட்டினருடன் மட்டுப்படுத்தப் படுகின்றது.

ஆசௌசம் என்பது பின்வருமாறு ஐந்து வழிகளில் உண்டாகும் என நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவற்றைப் பஞ்ச ஆசௌசம் என்பர்.

1. ஜனன ஆசௌசம் - ஒருவருடைய வீட்டில் பிறப்பு நிகழும்போது இது உரிய காலப்பகுதியில் நீங்கப்பெறும்.

2. மரண ஆசௌசம் - ஒருவடைய வீட்டில் இறப்பு நிகழும்போது இதுவும் உரிய காலப்பகுதியில் நீங்கப்பெறும்.

3. சூதக ஆசௌசம்- ஒரு வீட்டில் பெண்ணொருவர் பூப்படையும் போது அல்லது மாதவிலக்காகும் போது உண்டாவது.

இதுவும் உரிய காலப்பகுதியில் நீராடலுடன் நீங்கும்.
4. உச்சிஷ்ட ஆசௌசம் - ஒருவருடைய எச்சில்பட்ட உணவை உண்பதனால் வருவது - இது நீராடியவுடன் நீங்கும்

5. ஜாதி ஆசௌசம் - இறைசிந்தனை மற்றும் நல்ல வாழ்நெறி இல்லாதவர்களுடன் இணங்குவதால் ஏற்படுவது.

இவ்வாறு ஐந்து வகையான ஆசௌசங்கள் கூறப்பட்டாலும் பின்னைய இரண்டும் தற்காலத்தில் கடைப்பிடிக்கப்படுவதில்லை. மூன்றாவது ஆசௌசம் சம்பந்தப்பட்ட பெண்ணுடன் மட்டுப்படுத்தப்படுகின்றது. அது உரிய காலப்பகுதியில் நீராடலுடன் நீங்கப்பெறும். முற்காலத்தில் மாதவிலக்கான பெண்கள் தனித்து விடப்பட்டு வீட்டின் ஏனைய பகுதிகளுக்குச் செல்லாமலும் ஏனையவர்களுடன் தொடர்பின்றி இருத்தலாலும் இது சாத்தியமாயிற்று. ஆயினும் தற்காலத்தில் இவ்வாறு தனித்திராமல் வீட்டின் சுவாமி அறையைத் தவிர ஏனைய இடங்களிற்குச் சென்று வருதலாலும் உணவு சமைப்பதாலும் வீட்டிலுள்ள அனைவருக்கும் இத்துடக்கு உரித்தாகின்றது.

மேற்குறிப்பிட்ட ஐந்துவகையான துடக்குகள் தவிர மேலும் குறைப்பிரசவம், அந்தியேட்டி முடிவில் செய்யவேண்டிய சபிண்டீகரணஞ் செய்யாதிருத்தல் ஆகிய காரணங்களாலும் துடக்கு உண்டாகும். இத்துடக்குகள் குடும்பத்தினரையும் உரித்துடையவர்களையும் மட்டுமே பாதிக்கும்.

ஆனால் ஒருவீட்டில் இறப்பு நடந்தால் அந்தவீடு அமைந்த இடத்திலிருந்து ஒரு கோயில் மணியோசை கேட்கும் சுற்றுவட்டத்திற்குள் உள்ள வீடுகளில் உள்ளவர்களுக்கும் துடக்கு உண்டாகும். அவர்கள் கோயிலுக்குச் செல்வதோ அன்றிச் சுபகாரியங்களில் ஈடுபடுவதோ கூடாது. வீட்டை இடையிட்டுத் தெரு ஒன்று சென்றாலும் குறித்த வீட்டை மையமாகக் கொண்டு சுமார் 55 யார்கள் அல்லது 50 மீற்றர்கள் சுற்றுவட்டத்திற்குள் உள்ளவர்கள் துடக்கிற்குரியவர்களே. இத்துடக்கானது உடல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதும்

நீராடலுடன் நீங்கிவிடும். இதனைக் கிராமத் துடக்கு என்று குறிப்பிடுவர்.

ஆனாலும் காலமாற்றத்தின் காரணமாக இதில் சில மாறுபாடுகள் தோன்றியுள்ளன. முன்னைய காலத்தில் ஒருவர் இறந்தால் அடுத்த 24 மணி நேரத்தினுள் கிரியைகள் யாவும் நிறைவுற்று உடல் மயானத்திற்குச் சென்றுவிடும். ஆனால் இக்காலத்தில் கிரியை செய்யவேண்டியவர் மற்றும் உரித்துடையவர்கள் வெளிநாடுகளில் இருந்து வருகைதரவேண்டியதன் காரணமாக நீண்டநாள்கள் உடலை வீட்டில் வைத்திருக்க வேண்டிய தேவை உள்ளது. அதுவரை சிவாலயங்களைப் பூட்டி வைத்திருக்க முடியாது. எனவே ஆலயங்களில் மணியொலி எழுப்பாமல் அமைதியான முறையில் பூசைகள் இடம்பெறுவதோடு அயலவர்களும் நீராடித் தங்கள் செயல்களைத் தொடர்கின்றனர்.

தற்காலத்தில் முன்னிரண்டு ஆசௌசங்கள் மட்டும் அதாவது பிறப்பு, இறப்பு ஆசௌசங்கள் மட்டுமே பெரும்பாலும் கடைப்பிடிக்கப்படுகின்றது. இவ்வொவ்வொரு வகையான ஆசௌசங்களிற்கும் அவை நீங்குவதற்கான கால எல்லைகள் வகுக்கப்பட்டுள்ளது. அவரவர் குல வழக்கப்படியும் சமய ஆசாரங்களின் படியும் இவ்வெல்லைகள் மாறுபடுகின்றன.

இவ்வாறு சொல்லப்பட்டுள்ள துடக்குகள் இரண்டு விதங்களில் நீங்கும் எனக்கூறப்பட்டுள்ளது.

1. நீராடுவதால் நீங்குவது.
2. உரிய கால எல்லையில் நீராடி உரியகிரியைகள் செய்வதுடன் நீங்குவது.

## நீராடுவதால் நீங்குபவை.

துடக்கு உரித்தற்ற ஒருவர் ஒரு பிரேதத்தைக் காணுதல். ஒரு பிரேதத்தைத் தீண்டுதல், துடக்குடன் தொடர்புடையவரைத்

தொடுதல், அவர்களுடைய பொருள்களைத் தீண்டுதல், சுடுகாட்டு எல்லைக்குள் பிரவேசித்தல், பிரேத ஊர்வலத்தின் பின்னே செல்லுதல், பிரேதத்தைச் சுமத்தல், இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளல் ஆகிய காரணங்களால் உண்டாகும் துடக்கானது தலைமுழுகிக் கொள்ளுதலுடன் நீங்கும். ஆயினும் இறந்தவர் உடல் நீண்டநாள்கள் வீட்டில் இருக்கும் சந்தர்ப்பங்களில் கலந்து கொண்டவர்கள் நீராடினாலும் உடல் தகனத்திற்குச் செல்லும்வரை ஆலயங்களுக்குச் செல்லக் கூடாது என்று கூறப்படுகின்றது.

**உரிய காப்பகுதியில் நீராடுவதால் நீங்கப்பெறும் துடக்குகள்.**

முன்னோர் வகுத்த விதியின்படி ஒருவருடைய துடக்கு படிப்படியாக முப்பது நாள்களின் பின்னர் அதாவது முப்பது இரவுகளின் பின்னர் உரிய சடங்குகளுடன் நீங்கும். மது, மாமிசம் புசியாதவர்களாகிச் சிவதீட்சை பெற்று நித்திய சந்தியாவந்தனம் கிரமமாகச் செய்பவர்களுக்கு 28 நாள்களில் துடக்கு நீங்கும். இதே தூயநெறியைத் தொடர்ந்து கடைப்பிடித்து வரும் குடும்பத் தொடர்பில் மூன்றாந் தலைமுறையில் உள்ளவர்களுக்கு 16 நாள்களின் பின்னர் துடக்கு நீங்கும். இவர்கள் பிரேத்திலேயே அந்தியேஷ்டி செய்யலாம். ஆசாரிய அபிஷேகம் பெற்றவர்களுக்கு பன்னிரண்டு நாள்களில் துடக்கு நீங்கும்.

**திருத்தொண்டு செய்வோருக்கான துடக்கு நீக்கம்.**

திருக்கோயில் சார்ந்து நாதஸ்வரம் இசைத்தல், மேளமடித்தல், தாளம் போடுதல், மத்தளம் அடித்தல், வீணைவாசித்தல், திருமுறைப் பாடல்கள் பாடுதல், மாலை கட்டுதல், ஆகிய கடமைகளைச் செய்வோர் சிவதீட்சை பெற்றவர்களாகி மது, மாமிசம் உண்ணாதவர்களாகி ஆசார சீலர்களாக கோயில் தொண்டிலேயே ஈடுபாடு உடையவர்களாக வாழ்ந்தால் அவர்களுக்கு பதினைந்து நாள்களில் துடக்கு நீங்கும். இறைவன் சந்நிதியில் நடனமாடுவோர், இறைவனுக்கே பணியாளர்களாகி நிற்போர் என்பவர்களுக்குச் சிவனே உறவு.

இவர்களைத் துடக்குத் தீண்டாது. உலகியல் வாழ்வை அவர்கள் தொடர்ந்தால் அவர்களுக்குரிய நிறைநாள் துடக்கினைக் காத்தல் வேண்டும். நிர்வாண தீட்சை பெற்றுச் சிவபூசை நியமந் தவறாதவர்களுக்கு மூன்று நாள்களில் துடக்கு நீங்கும்.

**துடக்குத் தீண்டாதவர்கள் அல்லது தொடராதவர்கள்.**

1. இறைபணியுடன் சங்கமித்துள்ள தேவதாசியர், ஏனைய சிவப்பணியாளர்கள்

2. குருவருள் பெற்றுப் பிரமச்சரிய விரதம் பூண்டு உலகியலுக்கு அப்பாலாகிக் குருவுடனோ அல்லது பாட்டன், பாட்டி உடனோ இருந்து கல்வியைத் தொடரும் பிரமச்சாரிகள்.

3. எல்லாவித பற்றுகளையும் நீக்கி மனைவியுடனோ அன்றித் தனியாகவோ கானகஞ் சென்று பொழுதைக் கழிக்கும் வானப்பிரஸ்த ஆசாரம் உள்ளவர்கள்.

4. எவ்வித பற்றுமற்றுச் சிவசிந்தனையுள் மூழ்கி சந்நியாச ஆச்சிரமம் கொள்வோர்கள் (இத்தகைய சந்நியாச ஆச்சிரமம் கடைப்பிடிப்பவர்களின் மரணத்தினால் அவரது உறவினர்களுக்கும் துடக்கு உண்டாவதில்லை.) அது மட்டுமன்றிக் கிரகண நேரத்தில் யாரையும் துடக்குத் தீண்டுவதில்லை. தீண்டியிருந்த துடக்கும் நீங்கும். ஆயினும் கிரகணம் நீங்கியவுடன் மீண்டும் தொடரும்.

5. இறைவழிபாடுகளான தெய்வப் பிரதிஷ்டை, மஹோற்சவம், கன்னிகாதானம், மாங்கல்யதாரணம், செய்வோர் காப்புக் கட்டியபின்னர் வருந்துடக்கினால் தீண்டப்படமாட்டார்கள். காப்புநீக்கம் செய்யப்பட்டதும் துடக்குத் தொடரும்.

6. புராணபடனஞ் செய்வோர், வேதபாராயணஞ் செய்வோர் தீர்த்த யாத்திரை செய்வோர் போன்றவர்களைத் துடக்குத் தீண்டுவதில்லை. இடைவழியில் அறிந்தால் தமது செயல்களில்

பற்றுறுதியுடன் இருந்தால் நீராடிவிட்டுத் தமது கடமைகளைத் தொடரலாம்.

7. விசேடவைபவங்கள் நிகழ்த்திக் கொண்டிருக்கும் போது எவ்வகைத் தொடக்கு வந்தாலும் அந்த வைபவத்தை நிறுத்த வேண்டியதில்லை.. அதனை அமைதியாகச் சாதாரணமானதாக நடைமுறைப்படுத்தி முடிக்கலாம். துடக்கிற்கு உரிமை பூண்டவர்கள் நீராடுவதன் மூலம் துடக்கை நீக்கலாம்.

8. சிராத்தம் ஒன்றிற்காக உணவு சமைக்கத் தொடங்கியபின்னர் ஒரு துடக்கு ஏற்பட்டதாக அறிந்தால் அச்சிராத்தம் முடியும்வரை அத்துடக்குத் தொடராது. சிராத்தம் நிறைவு செய்யப்பட்டபின்னர் தொடரந்து அதனைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

**துடக்குத் தீண்டாத பொருள்கள்.**

துடக்கு உரிமையுள்ளவர்கள் பயன்படுத்தும் பொருள்களிலும் துடக்கு உண்டு. எனினும் பின்வரும் பொருள்களைத் துடக்குத் தீண்டாது. இப்பொருள்களைத் துடக்கு உள்ளவரிடமிருந்து பெற்றுப் புனித தேவைக்கும் பயன்படுத்தலாம். பணம், பொன், வெள்ளி, நீர், பால், தயிர், நெய், எள், கரும்பு, காய்கறிவகை, உப்பு, விறகு, எண்ணெய், மருந்து, புழுங்கலரிசி, பட்டு. ஆடு, பச்சையிலைவகை, மாடு முதலியனவற்றைத் துடக்குத் தீண்டுவதில்லை.

## துடக்குடனான ஒருவர் செய்யக் கூடாதவை.

1. துடக்குடனான ஒருவர் ஆலய வளாகத்தினுள் செல்லக் கூடாது.

2. துடக்குத் தொடர்புள்ளவர் துடக்குத் தொடர்பற்றவரைத் தீண்டக் கூடாது.

3. துடக்கு உள்ளவர் துடக்கு இல்லாதவரை வணங்குதல் கூடாது.

4. அதேபோல துடக்கு இல்லாதவர் துடக்கு உள்ளவரை வணங்குதல் கூடாது.

5. துடக்குக் காலத்தில் கட்டில், மெத்தையில் படுத்தல் கூடாது.

6. துடக்கு உள்ளவர்கள் உருத்திராக்கம் அணியக் கூடாது.

7. ஏகாதசி, துவாதசி விரதம் இருப்பவர்கள் பூசை செய்யாமல் விரதத்தைத் தொடரலாம்..

8. துடக்கு உள்ளவர்கள் தத்தம் வீடுகளில் சுபகாரியங்களை நிகழ்த்தக் கூடாது.

## ஆபத்து வேளையில் ஆசௌசம்.

நாட்டிற்கோ அல்லது கிராமத்திற்கோ அல்லது குடும்பத்திற்கோ ஆபத்து நேர்ந்துள்ள வேளையில் ஆபத்துடன் சம்பந்தப்பட்டவர்க்கு உதவுவதற்கு ஆசௌசம் தடையாகாது. உடனடியான உதவி இன்றியமையாதது எனக்கண்டால் தயங்காமல் உதவி செய்யலாம். ஆபத்திலிருந்து காப்பாற்றுவதற்காக மற்றொரு வீட்டினுள்ளே புகுதலோ ஆசௌசம் இல்லாத ஒருவரைத் தூக்கிவருதலோ பிடித்துவருதலோ வேற்றுப் பெண்ணொருவரைத் தூக்கிவருதலோ பிழையாகாது. அச்செயல்கள் புண்ணிய செயல்களாகக் கருதப்படும்.

**ஆதாரம்:-** (பண்டிதர். சி.அப்புத்துரை , சைவப்புலவர் சு.செல்லத்துரை ஆகியோர் எழுதிய தொடக்கும் தொடர்பும் அல்லது ஆசௌச விளக்கம் என்னும் நூல்.)

## தகனக் கிரியைக்குத் தேவையான பொருள்கள்.

1. விபூதி
2. சந்தனம்
3. குங்குமம்
4. கற்பூரம்
5. தீப்பெட்டி
6. ஊதுபத்தி
7. சாம்பிராணி
8. நெல்
9. பச்சையரிசி
10. பயறு
11. உளுந்து
12. எள்
13. மஞ்சள் மா
14. அபிடேகக் கூட்டு
15. சமித்துக் கட்டு
16. கழிநூற்பந்து
17. பஞ்சவர்ண நூல்
18. தேங்காய்
19. தேங்காயெண்ணை
20. மண்குடம் -1
21. மண்சட்டி -1
22. செம்பு - 9
23. குடம் - 1
24. குத்துவிளக்கு
25. உரல் - 1
26. உலக்கை - 1
27. மான்தோல் அல்லது பாய்கள்
28. தட்டம் -5
29. கத்தி - 1
30. பட்டுத்துண்டு - 3
31. கும்பவேட்டி -1
32. குருக்கள் வேட்டி சால்வை –1
33. கடமை செய்பவர்களுக்கான வேட்டி சால்வை
34. இறந்தவருக்குரிய புத்தாடைகள்
35. வெள்ளைத்துணி - தேவையான அளவு
36. சந்தனக்கட்டை
37. பாடை அல்லது சவப்பெட்டி
38. கயிறு
39. அறுகம்புல்
40. மாவிலை, வாழையிலை
41. அரிசிமா
42. பன்னீர்
43. நெய்
44. தேன்
45. நல்லெண்ணெய்
46. அரப்பு
47. அத்தர்
48. தசாங்கம்
49. நெற்பொரி
50. நவதானியம்
51. இளநீர்
52. வெற்றிலை, பாக்கு
53. வாழைப்பழம்
54. பழவகைகள்-வகைக்கு 2
55. எலுமிச்சம் பழம்
56. தோரணங்கள்
57. மாலைகள்
58. சொரி பூக்கள்.

## காடாத்துதலுக்குத் தேவையான பொருள்கள்.

1. மண்குடம்
2. பால்
3. தயிர்
4. விபூதி
5. சந்தனம்
6. குங்குமம்
7. வாழையிலை
8. அபிடேகக் கூட்டு
9. மஞ்சள்மா
10. பழவகை
11. நெற்பொரி
12. அடை அல்லது அரிசிமா ரொட்டி
13. இளநீர்
14. கோடித்துண்டு
15. பூசைப்பொருள்கள்
16. கடகம் அல்லது பெட்டி
17. வாளி
18 கத்தி
19. மண்வெட்டி
20. சிறுஏர்(கலப்பை)
21. வெற்றிலை, பாக்கு
22. வாழைப்பழம்
23. சிட்டி விளக்கு அல்லது பந்தம்

## அந்தியேட்டிக் கிரியைக்குத் தேவையான பொருள்கள்.

1. விபூதி - 100 கிராம்
2. சந்தனம் - 100 கிராம்
3. குங்குமம் - 50 கிராம்
4. ஊதுபத்தி - 1 பெட்டி
5. சாம்பிராணி - 100 கிராம்
6. நூல் பந்து - 2
7. திரிநூல் - 50 கிராம்
8. வாழையிலை - 20
9. நெல் - 6 கிலோகிராம்
10. பச்சை அரிசி - 2 கிலோகிராம்
11. பயறு - 250 கிராம்
12. உளுந்து - 250 கிராம்
13. எள்ளு - 250 கிராம்
14. அரிசிமா - 500 கிராம்

15. மஞ்சள்மா - 50 கிராம்
16. நவதானியம் - 1 பை
17. சம்பைக்கூட்டு - 5 பை
18. நெற்பொரி - 1 பை
19. அரப்பு - 100 கிராம்
20. நல்லெண்ணெய் -1/4 போத்தல்
21. தேசிக்காய் - 5
22. அத்தர்
23. பன்னீர்
24. தேங்காய் - 20
25. கற்பூரம் - 1 பெட்டி
26. தசாங்கம் - 1 பெட்டி
27. நெய் - 1/4 போத்தல்
28. தேன் - 1 அவுன்ஸ்
29. சமித்துக்கட்டு - 2
30. சந்தனக்கட்டை - 1
31. இலைமா
32. கரிமா
33. செங்கட்டிமா
34. வெற்றிலை - 50
35. பாக்கு - 50
36. வாழைப்பழம் - 50
37. பழவகைகள் - வகைக்கு 2
38. குருக்கள் வேட்டி - 1, கர்த்தாவிற்குரிய வேட்டி சால்வை
39. பலவர்ணத்துணி - 3 மீற்றர்
40. வெள்ளைத்துணி - 3 மீற்றர்
41. பட்டுத்துண்டு - 3
42. முட்டி - 2
43. சட்டி - 1
44. செங்கல் - 1
45. மாவிலை - 100
46. தோரணம் - தேவையான அளவு
47. பூமாலை - 2

48. பூச்சரம், சொரிபூ - தேவையான அளவு
49. பால் - 1 போத்தல்
50. தயிர் - 1 /4 போத்தல்
51. இளநீர் - 3
52. படையலுக்கு சோறு, கறி, பலகாரவகை
53. தானத்திற்குரிய அரிசி, காய்கறிவகை
54. சில்லறைக்காசு
55. தேங்காய் எண்ணெய் - 1 /4 போத்தல்.
56. செம்புகள் - 12
57. குடம் - 1
58. உரல், உலக்கை - 1
59. மான்தோல் அல்லது பாய்கள்
60. வைக்கோல் கற்றை - 1
61. கத்தி,
62. தட்டங்கள் - 5
63. கயிறு, தீப்பெட்டி

## பின்னிணைப்பு - V II
## வீட்டுக் கிரியைக்குத் தேவையான பொருள்கள்

1. மஞ்சள் தூள் - 50 கிராம்
2. விபூதி - 100 கிராம்
3. சந்தனம் - 50 கிராம்
4. குங்குமம் - 50 கிராம்
5. தேன் - 1 அவுன்ஸ்
6. நெய் - 1 அவுன்ஸ்
7. அரப்பு - 100 கிராம்
8. எள்ளு - 150 கிராம்
9. இஞ்சி - 100 கிராம்
10. சர்க்கரைக் கட்டி - 5
11. நல்லெண்ணெய் - 3 சிறிய போத்தல்கள்
12. தேசிக்காய் -5
13. திரிநூல்

14. தேங்காய் எண்ணெய் - 1/4 லீற்றர்
15. கற்பூரம் - 1 பெட்டி
16. ஊதுபத்தி - 1 பெட்டி
17. சாம்பிராணித்தூள் - 50 கிராம்
18. தலைவாழை இலை - 30
19. மாவிலை -20
20. பால் - 1/2 போத்தல்
21. தயிர் - 1/2 கப்
22. இளநீர் - 3
23. சில்லரைக் காசு - 50
24. பூக்கள்
25. பூமாலை - 2
26. அறுகம்புல்
27. பசுஞ்சாணம்
28. துளசி இலை
29. பச்சையரிசி - 3 கிலோகிராம்
30. தேங்காய் - 30
31. தானத்திற்குரிய அரிசி - 30 கிலோகிராம்
32. தானத்திற்குரிய மரக்கறிவகை
33. தானத்திற்குரிய வெங்காயம், பச்சை மிளகாய்
34. தானத்திற்குரிய மைசூர் பருப்பு
35. தானத்திற்குரிய மிளகாய்த்தூள்
36. தானத்திற்குரிய புளி
37. தானத்திற்குரிய கீரை
38. தானத்திற்குரிய முல்லை , முசுட்டை, பிரண்டை
39. வெற்றிலை - 50
40. பாக்கு - 50
41 பாக்கு சீவல் - 150 கிராம்
42. வாழைப்பழம் - 3 கிலோகிராம்
43. படையலுக்குரிய பழவகைகள்
44. அரிசிமா - 1/2 கிலோகிராம்
45. அரைத்த உழுந்து
46. குருக்கள் வேட்டி சால்வை 9x5 - 1

47. குருமார் வேட்டி சால்வை 9x5 - 4
48. 4 முழ வேட்டி அல்லது சேலை - 1
49. துவாய்த்துண்டு - 2
50. ஏகோதிட்டத்திற்குத் தேவையான பொருட்கள்
    1. பாய் -1
    2. தலையணை -1
    3. ஆசனப் பலகை -1
    4. விசிறி -1
    5. குடை -1
    6. செருப்பு 1 சோடி
51. யாத்ரா தானத்திற்கு
    1. செம்பு - 1
    7 செம்பு - 1
    8. விளக்கு 1- 1

## பின்னிணைப்பு- VIII

## ஆட்டைத் திவசத்திற்குத் தேவையான பொருள்கள்.

1. விபூதி
2. சந்தனம்.
3. குங்குமம்
4. மஞ்சள் மா
5. பச்சையரிசி மா
6. மாவிலை , தலைவாழையிலை
7. அறுகம்புல்
8. மாலைகள் , சொரிபூக்கள்
9. கோசலம், கோமயம்
10. பால், தயிர்
11. நெய், தேன்
12. எள்
13. வெற்றிலை, பாக்கு
14. வாழைப்பழம்
15. தேசிக்காய்
16. இஞ்சிக்கிழங்கு
17. கற்பூரம், சாம்பிராணி
18. ஊதுபத்தி
19. சர்க்கரை
20. நல்லெண்ணெய்
21. இளநீர்
22. தேங்காய்
23. கும்பநூல்
24. பச்சையரிசி
25. உழுந்துமா -சிறிதளவு
26. இறந்தவர் படம்
27. வேட்டி, சால்வை
28. தானப்பொருள்கள்
29. தட்சணை

## பின்னிணைப்பு- IX
## துடக்குக் கழிவுக்குத் தேவையான பொருள்கள்

1. விபூதி
2. சந்தனம்
3. குங்குமம்
4. அரிசி மா
5. மஞ்சள் மா
6. கும்பநூல்
7. மாவிலை
8. தலைவாழையிலை
9. அறுகம்புல்
10. சொரி பூக்கள்
11. கோசலம், கோமயம்
12. பால், தயிர்
13. நெய், தேன்
14. எள்ளு
15. வெற்றிலை. பாக்கு
16. வாழைப்பழம்
17. தேசிக்காய்
18. இஞ்சிக்கிழங்கு
19. கற்பூரம், சாம்பிராணி, ஊதுபத்தி
20. தேங்காய்
21. பச்சையரிசி
22. வேட்டி , சால்வை
23. தானத்திற்குரிய பொருள்கள்
24. தட்சணை

## பின்னிணைப்பு - X

## திருநீற்றுப் பதிகம்

மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமைபங்கன் திருவாலவாயான் திருநீறே.

வேதத்தி லுள்ளதுநீறு வெந்துயர் தீர்ப்பதுநீறு
போதந் தருவதுநீறு புன்மை தவிர்ப்பதுநீறு
ஓதத் தருவதுநீறு உண்மையி லுள்ளதுநீறு
சீதப்புனல்வயல் சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே

முத்தி தருவதுநீறு முனிவரணிவது நீறு
சத்திய மாவதுநீறு தக்கோர் புகழ்வதுநீறு
பத்தி தருவதுநீறு பரவ வினியதுநீறு
சித்தி தருவதுநீறு திருவாலவாயான் திருநீறே

காணவினியது நீறு கவினைத் தருவதுநீறு
பேணியணி பவர்க்கெல்லாம் பெருமைகொடுப்பது நீறு
மாணந் தகைவதுநீறு மதியைத் தருவதுநீறு
சேணந் தருவதுநீறு திருவாலவாயான் திருநீறே.

பூசவினியது நீறு புண்ணியமாவது நீறு
பேவினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பதநீறு அந்தமதாவது நீறு
தேசம்புகழ்வது நீறு திருவாலவாயான் திருநீறே.

அருத்தம தாவதுநீறு அவலமறுப்பது நீறு
வருத்தந் தணிப்பதுநீறு வானமளிப்பது நீறு
பொருத்தம தாவதுநீறு புண்ணியர் பூசும்வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே.

எயிலது வட்டதுநீறு இருமைக்கு முள்ளதுநீறு
பயிலப் படுவதுநீறு பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பதுநீறு சுத்தமதாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்தால வாயான் திருநீறே.

இராவணன் மேலதுநீறு எண்ணத் தகுவதுநீறு
பராவண மாவதுநீறு பாவமறுப்பது நீறு
தராவண மாவதுநீறு தத்துவ மாவதுநீறு
அராவணங்குந் திருமேனி ஆலவாயான் திருநீறே.

மாலொடயன் அறியாத வண்ணமுமுள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடிநீறு
ஏலவுடம்பிடர் தீர்க்கும் இன்பந்தருவது நீறு
ஆலமதுண்ட மிடற்றெம் ஆலவாயான் திருநீறே.

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங்கூட
கண்டிகைப் பிப்பதுநீறு கருதவினியது நீறு
எண்டிசைப் பட்டபொருளார் ஏத்துந்தகையது நீறு
அண்டத்தவர் பணிந்தேத்தும் ஆலவாயான் திருநீறே.

திருநீற்றுப்பதிகம் படிப்பதன் பலன்

ஆற்றலடல் விடையேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலிநிலாவம் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னனுடலுற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள்பத்தும் வல்லவர் நல்லவர்தாமே.

## பின்னிணைப்பு - XI
## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருப்பொற்சுண்ணம்.

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம்நல் தீபம்வைமின்
சத்தியும் சோமியும் பார் மகளும்
நாமகளோடு பல்லாண் டிசைமின்
சித்தியும் கௌரி யும்பார்ப் பதியும்
கங்கையும் வந்துகவரி கொண்மின்
அத்தனை யாறனம் மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே.

பூவியல் வார்சடை எம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நி லாமே
குனிமின் தொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மை யாளச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்தும் நாமே.

சுந்தர நீறணிந்தும் மெழுகித்
தூயபொன் சிந்நிதி பரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி யெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன்றன் பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள் கொழுநற்கு
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்தும்நாமே.

காசணி மின்கள் உலகை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தி
தேசமெல் லாம்புகழ்ந் தாடும் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே.

அறுகெடுப் பார்அய னும்மரியம்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம்பன் செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே.

உலக்கை பலஓச்சு வார்பெரியார்
உலகமெலா் உரல்போ தாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும்நாமே.

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந்து ஆர்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்ன கோவுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே.

வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைத் திலங்கச்
சோத்தெம் பிரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தம்நாமே.

வையக மெல்லாம் உரலது ஆக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யென்னும் மஞ்சள் நிறைய அட்டி
‘ மேதகு தென்னன் பெருந் துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே.

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆட
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொடு ஆட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே.

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவள ந்துடிப்பப்
பாடுமின் நந்தெம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே.

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை‘
அகப்படுத் தாட்கொண்டு அருமைகாட்டும்
பொய்யர் தம்பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித் தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே.

மின்னிடைச் செந்துவர் வாய்க் கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மானிமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையனெம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும்நாமே.

சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழையீர் சிவலோகம் பாடிக்
கங்கை இரைப்ப வரோடி ரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துமநாமே.

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினர்னைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே.

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனவிலும் கண்டறி யாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் சென்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்தும்நாமே.

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்ற
போனக மாகநஞ்சு உண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும்நாமே.

அயன்தலை கொண்டு செண்டாடல் பாடி
அருக்கனைக் காலால் உதைத்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடி
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடி நின்றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும்நாமே.

வட்டமலர் கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டு நின்றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும்நாமே.

வேதமும் வேள்வியும் ஆயி னார்க்கு
மெய்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாயிருள் ஆயி னார்க்குத்
துன்பமு மாயின்பம் ஆயி னார்க்குப்
பாதியுமாய் முற்றும் ஆயி னார்க்குப்
பந்தமுமாய் வீடும் ஆயி னார்க்கு
ஆதியுமாய் அந்தமும் ஆயி னார்க்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே

உசாத்துணை நூல்கள்

1. தமிழ்மரபில் மரணச் சடங்குகள்:- திருமதி இரத்தினதேவி மதியாபரணம் (இணையப் பதிப்பு)

2. தொடக்குந் தொடர்பும் அல்லது ஆசௌச விளக்கம்:- பண்டிதர் சி.அப்புத்துரை, சைவப் புலவர் சு. செல்லத்துரை (இணையப் பதிப்பு)

3. சோதிடமலர் சஞ்சிகை (1984)

<u>ஆலோசனையும் கருத்துகளும் வழங்கிய குருமார்கள்.</u>

1. பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா அவர்கள் (கோப்பாய் சிவம்)

2. பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா அவர்கள் (திருக்கணித பஞ்சாங்க கணிதர்)

3. சிவஸ்ரீ.க.கிருபானந்தக் குருக்கள் அவர்கள் (கிராம்புவில், சாவகச்சேரி)

4. சிவஸ்ரீ சோ. முருகதாஸ் குருக்கள் (ஆவரம்பிட்டி, மட்டுவில்)





978-955-38036-6-5

திருக்கணித பதிப்பகம் – சாவகச்சேரி.